24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 219 ஆனி 21 ஆம் நாள் சனிக்கிழமை 06 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## தூக்கில் இடுவதற்கு இடைக்காலத் தடை

கொழும்பு, ஜூலை 6
போதைப் பொருள் குற்றவாளிகளைத் தூக்கிலிடும் நடவடிக்கைக்கு ஒக்டோபர் 30 ஆம் திகதிவரை 21

## தூக்கை நீக்க வலியுறுத்தி நாடாளுமன்றில் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 6
அரசமைப்பில் இருந்து தூக்குத் தண்டனையை முழுமையாக நீக்க வேண்டும் என்று கோரித் தனி 07

## இராணுவம் நிலங்களை அபகரித்திருப்பது அநீதி

சமாதானத்துக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று மாவை கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 6
இலங்கையில் எங்குமில்லாதவாறு எமது பகுதியில் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. 07

# பலாலி வானூர்தி தளத்தின் அபிவிருத்தி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
நீண்ட தாமதத்தின் பின்னர் பலாலி வானூர்தித் தளத்தைப் பன்னாட்டுத் தரத்துக்கு அபிவிருத்தி செய்யும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில் கட்டுநாயக்க, மத்தள பன்னாட்டு வானூர்தித் தளங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது பன்னாட்டு வானூர்தித் தளமாக பலாலி வானூர்தித் தளம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. 21



## வடக்கைக் கட்டியெழுப்புவது உடனடியாக சாத்தியமில்லை

கைவிரித்தார் அமைச்சர் அபேசிங்க

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாணத்தை உடனடியாக அபிவிருத்தி செய்வது சாத்தியம் இல்லை. அதற்குப் போதுமான நிதி எம்மிடம் இல்லை என்று தெரிவித்தார் போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க.
பலாலி வானூர்தி 21

## ஓகஸ்டில் சீரமைப்புகள் நிறைவு செப்ரெம்பரில் சேவை ஆரம்பம்

அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
பலாலி வானூர்தித் தளத்தை பன்னாட்டுத் தரத்தில் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நிறைவுக்கு வரும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வானூர்திச் சேவைகள் ஆரம்பிக்கப்படும். குறைந்த செலவில் இந்தியாவுக்குப் பயணிக்க முடிய 21

## கரும்புலிகள் நினைவேந்தல் எழுச்சியுடன் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
சாவுக்கு நாள் குறித்து சரித்திரம் படைத்த கரும்புலிகள் நாள் நேற்று தாயகம் உட்பட உலகத் தமிழர்கள் வாழும் இடமெல்லாம் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. தாயகத்தில் அவசரகாலச் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ள நிலையில் உறவுகள் பலரும் தமது வீடுகளில் நினைவேந்தல்களை மேற்கொண்டுள்ளனர். தமிழர் வாழும் புலம்பெயர் நாடுகளில் கரும்புலிகள் நாள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. 21

## செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று தமிழர் திருவிழா

108 பானைகளில் பொங்கல்; பேருந்து ஒழுங்குகளும் ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜூலை 6
வடக்கு கிழக்கு எனும் தமிழர் தாயகத்தை துண்டுபோடும் முயற்சியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று தமிழர் திருவிழா பெருமெடுப்பில் இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட் 21

## மதுபோதையில் சாரத்தியம்: ஐவருக்கு ரூ. 1,62,500 தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
மது போதையில் வாகனம் செலுத்திய 5 பேருக்குத் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது 07

## திருமலை மாணவர் ஐவர் படுகொலை: குற்றவாளிகளை தண்டிப்பது அவசியம்

பன்னாட்டுக் கவனத்தை ஈர்க்க நடவடிக்கை
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் அரச படையினராலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். அதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. படுகொலையை நிரூபிக்கும் 21


யாழில் பிரமாண்டமான வளாகத்தில்

One year Top Up Degree

UGC Recognized International Degree

www.blccampus.edu.lk

- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✔ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✔ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443

BLC CAMPUS

Entry requirement
HND / any Equal Qualification in the similar study

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk



# ஜூலை மாத ராசிபலன்கள் - 2019






ஜூலை மாதத்தில் கிரகங்களின் சஞ்சாரத்தைப் பார்த்தால் உங்கள் ராசிக்குள் சூரியன், சுக்கிரன் ராகு மாத தொடக்கத்தில் இணைந்திருக்கின்றனர். மாத பிற்பகுதியில் சூரியனும், சுக்கிரனும் ராசிக்கு இரண்டாம் வீட்டுக்குள் மாறுகின்றனர். இப்போது ராசிக்கு இரண்டாம் வீட்டில் செவ்வாய், புதன் சஞ்சாரம் உள்ளது. ராசிக்கு ஆறாம் வீட்டில் குரு, ஏழாம் வீட்டில் சனி, கேது என கிரகங்களின் சஞ்சாரம் அமைந்துள்ளது. இந்த மாதத்தில் கிரகங்களின் சஞ்சாரத்தைப் பொருத்து மிதுனம் ராசிக்காரர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, திருமண யோகம் எப்படி என்று பார்க்கலாம்.

**அவசரம் வேண்டாம்**

ராசியில் உள்ள சுக்கிரன், சூரியன், ராகு. ராகு குழப்பத்தை கொடுத்தாலும் உற்சாகத்தை தருவார். முகப் பொலிவு ஏற்படும். உஷ்ணம் தொடர்பான நோய்கள் ஏற்படும். சனி பார்வை மிதுனத்தின் மீது விழுகிறது. கேதுவும் பார்ப்பதால் உற்சாகம் குறைவாக இருக்கும். ஏதோ தடை ஏற்படும். நடக்கிற வேலைகள் எல்லாம் ஸ்லோவாகவே இருப்பார். அவசரப்பட வேண்டாம்.

**வார்த்தைகளில் கவனம்**

ராசிநாதன் புதன் சந்திரன் வீட்டில் செவ்வாய் உடன் இணைந்திருப்புதால் உற்சாகமான மனநிலையில் இருப்பீர்கள். அடிக்கடி கோபம் வரும். உணர்ச்சிவசப்பட்டு நிதானத்தை இழக்க வேண்டாம். தியானம் செய்யுங்கள். செவ்வாய் வாக்கு ஸ்தானத்தில் இரண்டாம் வீட்டில் இருப்பதால் யாருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். உறவுகளுடன் பகை வேண்டாம் சண்டைகளை தவிருங்கள். நெருப்பு வார்த்தைகள் உங்களுக்கு தொல்லைகளை ஏற்படுத்தும் ராசியில் சுக்கிரன் இருப்பதால் முகத்தில் பொலிவு கூடும். வேலை செய்யும் இடத்தில் உற்சாகமாக இருப்பீர்கள். குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் தேடி வரும்.

**வெற்றிகள் கைகூடும்**

ஏழாம் வீட்டில் சனி கேது. அரசு விருதுகள் கிடைக்கும். தந்தையாரின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். வாய்ப்புகள் தேடி வரும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். பணியிட மாற்றம் கிடைக்கும் மிகச்சிறந்த வெற்றிகள் தேடி வரும்

**கண்டச்சனி கவனம்**

கடன்கள் அடைபடும் புதிய கடன்கள் வாங்காதீர்கள். மாணவர்களுக்கு உயர்கல்வி யோகம் தேடி வரும் வெளிநாடு சென்று படிக்கலாம். கல்விக்கடன்கள் கிடைக்கும். கண்டகச் சனி இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் தடைகள் இருக்கும் என்றாலும் கவலை வேண்டாம்.

**விட்டுக்கொடுங்கள்**

பெண்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும். வேலைக்கு செல்லும் பெண்களுக்கு உயர்பதவிகள் தேடி வரும். பிரமாண்ட யோகம் தேடி வரும். வார்த்தைகளில் கவனம் தேவை. கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்து செல்லுங்கள்.



# துலாம் ராசிக்காரர்களின் குணநலன்கள்




விருச்சிக ராசிக்காரர்கள், செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். தங்களுக்கு கிடைக்கும் பொருளோ, பணமோ இரண்டையும் ஒன்றைப், பத்தாக்கும் திறமை வாய்ந்தவர்கள். மார்க்கெட்டிங், சேமிப்பு, இன்சூரன்ஸ் போன்ற துறைகளில் இறங்கி கலக்குவார்கள்.

புதிதாகத் தொடங்கப்பட்ட ஒரு தொழிலையோ நிறுவ னத்தையோ பெரிய அளவில் கொண்டுபோய் நிலை நிறுத்துவார்கள்.

மேஷ ராசிக்கும் விருச்சிக ராசிக்கும் செவ்வாய்தான் அதிபதி. கோபக்காரர்கள்தான் என்றாலும், தங்களுடைய கோபத்தை எப்போது, எப்படிக் காட்ட வேண்டும் எனத் தெரிந்துவைத்திருப்பார்கள். சாதுர்யமாகப் பேசி எதையும் சாதித்துக்காட்டுவார்கள். கோபம் உள்ள இடத்தில்தான் குணம் இருக்கும் என்பதற்குரிய உதாரண புருஷர்கள்.

விருச்சிக ராசியின் அடையாளம், தேள். கோபத்தில் தேளைப்போன்று வார்த்தைகளைக் கொட்டிவிடுவார்கள். பிறகு, அவர்களே அதை உணர்ந்து மன்னிப்பும் கேட்பார்கள். பிறகு, நல்ல விதமாகப் பேசுவார்கள். ஆனாலும், அவ்வப்போது கோபம் வெளிப்படத்தான்செய்யும். எந்த ஒரு செயலையும் ரகசியமாகவே செய்வார்கள். காரியம் வெற்றிபெறும் வரை மறைத்தே செய்வார்கள். முதலில், நான் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். நான் நன்றாக இருந்தால் தான் தன்னைச்சார்ந்தவர்களை நன்றாக வைத்துக்கொள்ள முடியும் என்று நினைப்பார்கள்.

ஒருவரை தனக்குப் பிடித்து விட்டால், அவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவரப் போராடுவார்கள். அவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவர கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள். குறைகளை முகத்துக்கு நேராக பளிச்சென்று சுட்டிக்காட்டுவார்கள். 'மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக்கனியும் முன்னே கசந்து, பின்னே இனிக்கும்' என்பதற்கேற்ப வெற்றிபெற்ற பிறகே அவர்களது அருமையை மற்றவர்கள் உணர்வார்கள். இளமையின் தொடக்கத்தில் இவர்களது முன்னேற்றத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு, 35 வயதுக்கு மேல் நல்ல நிலைக்கு வருவார்கள்"

# எந்த ராசிக்காரர்களுக்கு எந்த நாள் அதிர்ஷ்டம்




ஜாதகம், பரிகாரம், ராசிப்பலன் போன்றவற்றின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் அதிகம் உள்ளனர். இருப்பினும், மனதின் ஒரு ஓரத்தில் இதன் மீது நம்பிக்கை இருக்கத் தான் செய்கிறது. ஆனால் அதை வெளிப்படையாக காண்பித்துக் கொள்வதில்லை. எப்படி ராசியைக் கொண்டு, அந்த ராசிக்குரியவரின் குணத்தை சொல்ல முடிகிறதோ, அதேப் போல் எந்த ராசிக்கு எந்த நாள் அதிர்ஷ்டத்தை வழங்கும் என்பதையும் சொல்ல முடியும். அந்த நாளில் அந்த ராசிக்காரர்கள் தங்களது முக்கிய பணிகளை மேற்கொண்டால், வெற்றிக் கிட்டும். அது தொழிலாகட்டும் அல்லது சொந்த வாழ்க்கையாகட்டும், அனைத்திலும் வெற்றி கிடைக்கும். சரி, இப்போது எந்த ராசிக்காரர்களுக்கு எந்த நாள் அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும் என்று பார்ப்போம்.

**மேடம்:**

மேட ராசிக்காரர்களுக்கு செவ்வாய் கிழமை அதிர்ஷ்டத்தை வழங்கும் நாள். இந்நாளில் எந்த ஒரு செயலை செய்தாலும் வெற்றிக்கிட்டும். நீங்கள் மற்றவர்களிடம் உங்களது திறமையை வெளிக்காட்ட நினைத்தால், இந்நாளில் மேற்கொள்ளுங்கள், இதனால் வெற்றி உங்களுக்கே.

**இடபம்:**

வெள்ளி, புதன், சனி மற்றும் திங்கள் போ்ன்ற கிழமைகள் ரிஷப ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டத்தை வழங்கும். செவ்வாய் கிழமைகளில் ஊதாரித்தனமான செலவுகளைச் செய்யக்கூடும். இந்த ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் நல்லது.

**மிதுனம்:**

இந்த ராசிக்காரர்களுக்கு புதன் கிழமை அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும். மிதுன ராசிக்காரர்கள் எந்த ஒரு புதிய செயலையும் புதன் கிழமைகளில் மேற்கொண்டால் நல்லது நடக்கும். மொத்தத்தில் இந்த கிழமை உங்களுக்கு முன்னேற்றத்தை மட்டுமே தரும்.


**கடகம்:**

கடக ராசிக்காரர்களுக்கு ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகள் இன்பம் மற்றும் மகிழ்ச்சியை அளிக்கும். திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகள் வெற்றியை வாரி வழங்கும். புதன்கிழமை பயணங்கள் மற்றும் முதலீடுகளுக்கு உகந்தது. சனிக்கிழமை சாதகமில்லாத நாள். இந்த ராசிக்காரர்கள் திங்கட்கிழ மைகளில் விரதமிருப்பது நல்லது.

**சிம்மம்:**

சிம்ம ராசிக்காரர்களுக்கு ஞாயிற்று கிழமை சிறந்த நாள். இந்நாளில் உங்களது திறமையை முழுமையாக காணலாம். இந்நாளில் எந்த ஒரு காரியத்தில் இறங்கினாலும் வெற்றியை மட்டுமே பரிசாகப் பெறுவீர்கள்.

(தொடரும்)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



04.07.2019 அன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற 81 ஆவது பட்டமளிப்பு விழாவில் கால்நடை மருத்துவத் துறையில் முதுமாணிப்பட்டம் (**M.V.Sc**) பெற்ற Dr.S.**தயாபரன்**, Dr.B.**ஜெகஜீவன்**, Dr.S.C.**விமலகுமார்**, Dr.S. **திருஆலன்**, Dr.S.**திலகநாதன்** ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

Best Wishes

**நண்பர்கள்**

### வேலையாள்கள் தேவை

கலர் லாப் ஒன்றுக்கு Photo Shop தெரிந்த மற்றும் அல்பம் பைண்டிங் செய்யக்கூடிய பெண்கள் தேவை. (பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

**077 722 2362**

### 58 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

**யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக்கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 58ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்** நாளை (07.07.2019) ஞாயிற்றுக் கிழமை யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என்பதனை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்

**ந.நற்குணராசா**
**செயலாளர்.**

### கடை வாடகைக்குண்டு

கிளிநொச்சி, கரடிப்போக்கு HNB வங்கி அருகாமையில் மூன்று கடைத்தொகுதி (1900 சதுர அடி) வாடகைக்கு உண்டு.

**075 971 6850**

### பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை

1. கணிய அளவையியலாளர் - QS (Minimum 3 year experience)
2. தொழில்நுட்ப அலுவலர் - TO
   - NVQ Level 4 or Equivalent with minimum 2 year experience

Contact No: 075 918 3940
E-mail : starcontractors12@hotmail.com

### நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 785 | 05.07.2019 |

வெற்றி இலக்கங்கள்: 01 46 53 60 ஆங்கில எழுத்து M

அடுத்தசெவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 28, 254;140/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 05.07.2019 | 2554 | நீலம் |

துலாம் — வெற்றி இலக்கங்கள்: 36 38 49 62

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,990,846/=

07.07.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 999
சீட்டிழுப்பு திகதி 2019.07.04 வியாழக்கிழமை

T 22 26 33 73

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,175,160/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

### அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 660
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.05

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,114,530/-

வெற்றி இலக்கங்கள்: 18 45 61 66 ஆங்கில எழுத்து Z

அபிவிருத்தி லொத்தர் சபை

## Dialog MEGA அதிஷ்டம்

சனிக்கிழமை இரவு 7.56 க்கு சக்தி TV ஊடாக

### வெற்றியாளர்கள்



ரூ. 10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர் N.E. விஜயசிரி - இரத்தினபுரி

B.S. குமார வெலிகம

V.M. தயாரத்ன குருநாகல்

K.A.D. தர்மதாச வெலிகம

G.D. தக்சராணி தெனிபிடிய

**இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 10,961,538/-**

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- இரண்டு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- ஒரு கோடி வென்ற 21 வெற்றியாளர்கள்
- 20 இலட்சம் வென்ற 10 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 179 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 1085 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் பிரமாண்டமான பரிசுக்குவியல்
**#121#** டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

twitter.com/dialoglk facebook.com/dialoglk

Dialog — எதிர்காலம் இன்றே.
an axiata company — www.dialog.lk

## ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற. வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில். விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

- Poster
- Notice
- Lable
- Wedding Card
- Bag Print
- Award
- Frame Item
- Batch
- Vehicle Brand
- T-Shirt
- Cap
- ID Card
- Key Tag
- Book Mark
- Pen Print
- Book Printing
- Wooden Print

பனர் பிரிண்ட் (Banner), 35/=

**அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்**

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஒவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472

New Market, 1st Floor, Chavakachcheri
esprintersjaffna@gmail.com
021 492 7432

பொதுநலம்
என்பது
புல்லாங்குழல் போன்றது.
சுயநலம்
என்பது
கால்பந்து போன்றது.
இவை இரண்டுமே
காற்றால் இயங்குகின்றன.
ஆனால்
ஒன்று
முத்தமிடப்படுகின்றது.
மற்றொன்று
உதைக்கப்படுகின்றது.
தான் வாங்கிய காற்றை
சுயமாக வைத்துக் கொள்வதால்,
கால்பந்து உதைபடுகிறது.
ஆனால்
தான் வாங்கிய காற்றை
இசையாக புல்லாங்குழல்
தருவதால்
அது முத்தமிடப்படுகிறது.
சுயநலம் உள்ள மனிதன்
புறக்கணிக்கப்படுவான்,
பொதுநலம் உள்ளவன்
போற்றப்படுவான் !
இனிமையான மாலை நேர
வணக்கம்.!!

# twitter



twitter.com/MJ_twets
காரணத்தோடு சேமித்து வைத்த அத்தனை கோபங்களும் கண்டதும் காரணமின்றி கருணை கொலை செய்யப்படும் அன்பானவர்களுக்காக...



twitter.com/Srilaksman0
ஒருவர் பற்றிய குற்றம், குறையை பிறரிடம் சொல்லாதீர்கள்; அது ஒன்றிற்கு இரண்டாக அவரை சென்றடையும்.



முகமூடி™ @mugamoodi11
ஆசைக்காக கடனை வாங்கிட்டு பிறகு ஒவ்வொரு மாதமும் பல ஆசைகளை தியாகம் செய்வதற்கு பெயர் தான் லோன்..!!



# ஜான்சி ராணியாக களமிறங்கிய அனுஷ்கா

தமிழ், தெலுங்கு பட உலகின் முன்னணி கதாநாயகியான அனுஷ்கா நடிப்பில் 'பாகுமதி' படம் கடந்த வருடம் ஜனவரியில் திரைக்கு வந்தது. அதன்பிறகு படங்கள் குறைந்தன. 'இஞ்சி இடுப்பழகி' படத்தில் உடல் எடையை கூட்டிய அனுஷ்காவால் மீண்டும் அதை குறைக்க முடியவில்லை. இதனாலேயே அவருக்கு பட வாய்ப்புகள் வரவில்லை.

அதன்பிறகு வெளிநாடு சென்று ஒரு மாதம் சிகிச்சை எடுத்து பழைய தோற்றத்துக்கு மாறி திரும்பினார். தற்போது மாதவன் ஜோடியாக 'சைலன்ட்' படத்தில் நடித்து வருகிறார். தமிழ், தெலுங்கு மொழிகளில் இது தயாராகிறது. அமிதாப்பச்சன், சிரஞ்சீவி, நயன்தாரா, தமன்னா ஆகியோர் நடிக்கும் 'சைரா நரசிம்ம ரெட்டி' சரித்திர படத்திலும் அனுஷ்கா கவரவ தோற்றத்தில் வருகிறார்.

இந்த படத்தில் அனுஷ்கா சம்பந்தப்பட்ட காட்சிகள் தற்போது படமாக்கி முடிக்கப்பட்டு உள்ளன. இதில் அனுஷ்கா ஜான்சி ராணி கதாபாத்திரத்தில் நடித்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்ட ஜான்சிராணி சம்பந்தமான சில காட்சிகள் சைரா நரசிம்ம ரெட்டி படத்தில் இடம்பெறுகிறது என்றும், அந்த காட்சிகளில் அனுஷ்கா ஜான்சி ராணியாக வருகிறார் என்றும் படக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.





# பேரமைதி

வழக்கமாக அமைதி என்றாலே எதிர்மறையான ஒன்றாகவே நாம் புரிந்து கொண்டிருக்கிறோம்.
ஓசை இல்லாத, சந்தடியற்ற வெறுமை என்றே அது புரிந்து கொள்ளப்படுகிறது.
இப்படி தவறாகப் பொருள் கொள்ளும் நிலை பரவலாக காணப்படுவதற்குக் காரணம், அமைதி என்ற அனுபவம் வெகு சிலருக்கு மட்டுமே கிடைத்திருப்பதுதான். ஆனால் அமைதியோ முற்றிலும் வேறான நடப்பு.
அது முழுதும் நிச்சயமானது, நேர்மறை தன்மை கொண்டது.
அது உளதாயிருப்பது, வெறுமையானதல்ல. நீங்கள் இதற்கு முன் கேட்டிராத ஓர் இசையுடன்,
உங்களுக்கு பரிச்சயம் இல்லாத ஒரு நறுமணத்துடன் நிரம்பி வழிகிறது.
அதன் ஒளியை அகக்கண்ணால் மட்டுமே காண முடியும். எந்த வொரு வார்த்தையாலும் எட்ட முடியாதது, ஆனால் உங்களால் எட்ட முடியும். நாட்கள் வந்து போகும்,
ஆண்டுகளும், காலங்களும் வந்து போகும். வாழ்க்கைகள் வந்து போகும். உங்கள் ஜீவனின் அமைதி மட்டும் அப்படியே இருக்கும். அதே ஆழம் காண முடியாத இசை, அதே தெய்வீக நறுமணம், நிலையற்ற அனைத்தும் கடந்த நிலையான பேரமைதி

# கவிதை.... கவிதை....





கண்ணே...
அன்பிற்கு நீ ஒரு அண்டா..,
பண்பிற்கு நீ ஒரு பாத்திரம்,..
பாலுடன் கலந்த தண்ணீராய்..
நாம் கலந்திருக்கலாம்,,,
நீ இல்லையென்றால்
என் வாழ்வு
பாவக்காயாய் கசக்கும்...

நம் காதல் கத்திரிக்காயல்ல..
எளிதாய் கிடைப்பதற்கு...
நம் காதல் நல்விருந்து..
கிடைப்பதற்கு அரிது...

உன்னை காணும்போது
என் நெஞ்சு சுடுபாலாய் கொதிக்கிறது,..
வா வந்து
தண்ணிர் தெளி

இரவிலே என் கனவிலே
உப்புமாவை போல் என்னை
கிண்டு கிண்டுகிறாய்,..
பகலிலே என் நினைவினை
தேங்காயை துருவது போல்
துருவி துருவுகிறாய்,..
ஏலக்காய் போல்
வாசம் தூக்குகிறது

நீ அருகில் வந்தால்...
பொங்கல் போல்
என்மனம் பொங்கிறது
நீ என்னுடன் பேசினால்...
அரும்சுவை விருந்தாய்.!!
அமையும் நீ தரும் சம்மதம்.!!!

சண்டையில் ஒருவர்
தான் வெல்லலாம்...



ஆனால்...
சமாதானத்தில் தான்
இருவரும் வெல்லமுடியும்..!

நம் வாழ்க்கையில் ரெம்ப
த்ரில்லிங்கான
பயணம் என்பது...



பெட்ரோல் எப்போது
திருமோ என பயந்து பயந்து
பைக் ஓட்றது தான்.!

வாழ்க்கையில் சந்தோஷம்
மட்டும் ஆம்புலன்ஸ் மாதிரி
சர்ருனு போயிருது...



கஷ்டம் மட்டும் சாவு ஊர்வலம்
மாதிரி பொறுமையா தான்
போவுது... 😢😢😌😌🙊🙊

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

அகில இலங்கை இளங்கோ கழகத்தினால்
நடத்தப்பட்ட சிலப்பதிகார விழாவில்
யாழ். மாவட்ட அரசாங்க அதிபரது கரங்களால்
**"சமூக புரவலர்"** விருதானது
கிருபா சாரதி பயிற்சி பாடசாலை யின் அதிபர்

## அ.கிருபாகரன்

அவர்களுக்கு
வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு
அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
**கல்வி சமூகம் மற்றும் நண்பர்கள்**



# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2019

**06.07.2019 - 18.07.2019**

**06.07.2019 சனிக்கிழமை - கொடியேற்றம்**
வசந்த மண்டபப் பூஜை காலை 8.30 மணி
கொடியேற்றம் - பகல் 10.30 மணி

**08.07.2019 திங்கட்கிழமை - மஞ்சத் திருவிழா**
வசந்த மண்டபப் பூஜை - மாலை 5.00 மணி
இதனைத் தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதியுலா.

**12.07.2019 வெள்ளிக்கிழமை - கைலாச வாகனத் திருவிழா**
வசந்த மண்டபப் பூஜை - மாலை 5.00 மணி
இதனைத் தொடர்ந்து அம்பாள் கைலாச வாகனத்தில திருவீதியுலா.

**14.07.2019 ஞாயிற்றுக்கிழமை - சப்பறத் திருவிழா**
வசந்தமண்டபப் பூஜை - மாலை 5.00 மணி
இதனைத் தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திருவீதியுலா.

**15.07.2019 திங்கட்கிழமை - தேர்த்திருவிழா**
வசந்தமண்டபப் பூஜை - காலை 6.30 மணி
இதனைத் தொடர்ந்து இரதோற்சவம்.

**16.07.2019 செவ்வாய்க்கிழமை - தீர்த்தோற்சவம்**
வசந்தமண்டபப் பூஜை - காலை 6.30 மணி தொடர்ந்து தீர்த்தோற்சவம்

**17.07.2019 புதன்கிழமை - பூங்காவனத் திருவிழா மாலை 5.30 மணி**

**18.07.2019 வியாழக்கிழமை - சங்காபிஷேகம் - காலை 8.00 மணி**
தேரடி வைரவப் பொங்கல் பிற்பகல் 3.30 மணி

**நந்தாவில், கொக்குவில்.** **ஆலய பரிபாலனசபை**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com, 021493 1111

# கணக்காய்வாளர் தேவை

கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்துள்ள சிவகுரு ஹாட் வெயார் நிறுவனத்துக்கு நன்கு அனுபவம் வாய்ந்த கணினி கையாளக்கூடிய 30 - 35 வயதுக்குட்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆண் கணக்காய்வாளர் உடனடியாகத் தேவைப்படுகின்றார். உணவுடன் வேதனம் ரூபா 50,000/- இற்குக் குறையாமல் வழங்கப்படும்.

**அத்துடன் கீழ்க்குறிப்பிடும் பணிகளுக்கும் ஆள்கள் தேவை.**

- **மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்**
- **சிமெந்து விற்பனைப் பிரதிநிதி**

இவர்களுக்கு மேல் கூறிய நிபந்தனைகள் பொருத்தமுடையதாகும். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 772 2305**

# Yarl Smart Water Solution (Pvt) Ltd

உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீர் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமா?

LIFE TIME Service Warranty

SPECIAL OFFER



**30 Liters Per Hour**



**60 Liters Per Hour**



**250 LPH Water Purification Plant.**



**யாழ் மக்களின் நீர்ப்பிரச்சினைகளுக்கு ஏற்ற முறையில் 5000/- இல் இருந்து நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.**

நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....



**Hotline:-**
**077 057 3684**
**077 473 9802**
**077 112 6410**

**Head Office:-** No.341, K.K.S Road, Jaffna. 021 430 0044

**Branch:-** Karadippokku Junction, Kilinochchi. 021 430 0045

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி குலசிங்கம்



தோற்றம் 27.11.1940 மறைவு 03.07.2019

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு கெருடாவில், மானப்பந்தோட்டகுறிச்சியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி லீலாவதி குலசிங்கம் கடந்த (03.07.2019) புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமி குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பெறாமகளும் சுபாஜினி, மணிவண்ணன் ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும் ஜீவராஜாவின் அன்பு மாமியும், சாயகி, வேந்தன், கேசினி, ஹரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இரத்தினலிங்கம், பாலேந்திரா மற்றும் செல்வராணி, சபாநாதன், இராமஜெயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதி மலர், செல்வராணி, கந்தசாமியார், இந்துமதி, விஜயலட்சுமி, இராமலிங்கம், கமலாதேவி, சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**

கணவர்: **குலசிங்கம்** (கெருடாவில்)
பெறாமகன்: **மணிவண்ணன்** (கெருடாவில்) 077 757 0375
மருமகன்: **ஜீவராஜா** - (கனடா) +416565 0172

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 23 . 06 . 1950



விண்ணில் 08 . 06 . 2019

### அமரர் பசுபதி செல்வபூரணம்

கடந்த 08.06.2019 (சனிக்கிழமை) இறைபதமடைந்த கொடுக்குளாய்.ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் வீதி.பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி அமரர் பசுபதி செல்வபூரணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அந் நிகழ்விலும் 08.07.2019 திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11..00 மணியளவில் நடைபெறவுள்ள சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.அத்துடன் அன்னாரின் பிரிவால் துயருற்றவேளை இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு துயர்பகிர்ந்தோர், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களினூடாகத் துயர்பகிந்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

இல. 65, 1ஆம் ஒழுங்கை,
ஐயனார் வீதி, பருத்தித்துறை

குடும்பத்தினர்
021 226 0358,
077 666 0606

## மாடுகள் விற்பனைக்குண்டு

நெல்லியடியில் 9.7 மாதங்கள் சினைப்பட்ட ஜே.சி. இன மாடுகள் இரண்டு விற்பனைக்குண்டு.

**071 409 2504**

## காணி விற்பனைக்கு

நக்கா வீதியில் 3 பரப்பு காணியும், நாவலர் வீதியில் கனகரட்ணம் மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 076 697 2287

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### ஐயாத்துரை வரதராஜா

(முன்னாள் பிரதம முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலக திட்டமிடல் பிரிவு (ஓய்வுநிலை), கவிஞர்)

மண்ணில் 16.03.1949 விண்ணில் 20.06.2015

எங்களது உயர்வுக்காய் என்றுமே உழைத்த
எம்மினிய குடும்பத்து ஒளிவிளக்கே அப்பா!
இங்கிதமாய் யாம்வாழ ஏற்ற வழி காட்டியின்று
அன்னைகலா வாணிபாதம் பற்றியே சென்றீரோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

59,கலைமகள் வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா வைபோகராஜா
(வைலஜா ஸ்ரோர்ஸ்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஆடியம்பிட்டி ஒழுங்கை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா வைபோகராஜா (வைலஜா ஸ்ரோர்ஸ்) கடந்த(30.06.2019)ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகலட்சுமி தம்பதிகளின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான யோகலிங்கம் தில்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் அன்புக்கணவரும்தனுஜா(மன்/அந்தோனியார்புரம் அ.த.க பாடசாலை ஆசிரியை), சரண்யா (கனடா), கஜமுகலக்ஸ்மி, யாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்மாறனின் (கனடா) பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற வைகுந்தராஜா மற்றும் சச்சிதானந்த சிவலட்சுமி (ராணி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற தையல்நாயகி ம்ற்றும் பேரின்பநாயகம், நடனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), சரோஜினிதேவி (இளைப்பாறிய ஆசிரியை), பரமநாதன் (டுபாய்), தருமநாதன் (NEFAD),ஸ்ரீஸ்கந்தராஜா, ரதிதேவி (பிரான்ஸ்), சியாமளாதேவி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற நடேசபிள்ளை மற்றும் காந்தகுமார், யாழினி, மல்லிகா (ஆசிரியை), சத்தியா,சாந்தலிங்கம் (பிரான்ஸ்), விவேகானந்தா ஆகியோரின் சகலனும் ரஜினிகாந், சசிகாந்த், வைலஜா, கிந்துஜா ஆகியோரின் சிறிய தந்தையும் கஜிதா, உபேந்திரன், உஷாங்கன், சபிதா, சங்கீதா, விஜிதா, கிருஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனஷ்கா, அனன்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் கமலநாதன்



மலர்வு 14.11.1946 உதிர்வு 01.07.2019

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மகாவித்தியாலய மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கமலநாதன் 01.07.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - நவரட்ணமணி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களரன சுப்பிரமணியம் - தவமணி தம்பதியரின் மூத்த மருமகனும், திருமதி அம்பிகாமலரின் அன்புக் கணவரும், ஜெயந்தி, டயாளினி, ரேணுகா, பிரதீபா, சர்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகலோகதேவி, இராயேஸ்வரி, பத்மசோதி, இராசலிங்கம், சண்முகலிங்கம், சடாச்சரம், சதாநந்தராஜா ஆகியோரின் சகோதரனும், சிவகுமார், குருமூர்த்தி, ஸ்ரீரவி, காலஞ்சென்ற டினோஜன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற சிவகுருநாதனின் அத்தானும், பிரபு சிகா மணியின் மைத்துனரும், கனகலிங்கம், காலஞ்சென்ற தவமலர்மற்றும்அரியமலர், மகாலிங்கம், பாக்கியலட்சுமி, நித்தியலிங்கம், தனலட்சுமி, காலஞ்சென்ற சீதாலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், விஜயலட்சுமி, ஜீவராணி, சிவகாந்தா, சிவாஜினி, பராசக்தி, குமாரகுலசிங்கம், பாலச்சந்திரன், தங்கராசா, காலஞ்சென்ற குமுதினி மற்றும் கோமதி ஆகியோரின் சகலனும், கனீஸ், விருட்சன், ஆதுஜன், சந்தோஷ், அனுஜா, சக்தி, அக்ஷயா ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் Jayaratne Funeral Director's இல் நாளை (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காகவைக்கப்பட்டு நாளை மறுதினம் (08.07.2019)திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.குருமூர்த்தி
189 /11, 3/6, மகாவித்தியாலய மாவத்தை,
கொழும்பு -13.

தகவல்
குடும்பத்தினர்.

**011 244 7992, 076 783 2052**

# நேர்மையான பிச்சைக்காரன்!



ஒரு மனிதன், தனக்கு கிடைக்கும் அதிர்ஷ்டத்தை, எப்படி பயன்படுத்திக் கொள்கிறான் என்று அறிய, மன்னர் கஜேந்திரனுக்கு ஆவல் ஏற்பட்டது.

ஒரு நாள், இரண்டு ரொட்டித் துண்டுகளை எடுத்து வர கூறி, அவற்றில், ஒன்றினுள் விலையுயர்ந்த வைரக் கற்களை, பதுக்கி வைத்தார்.

பின், இரண்டு றொட்டி துண்டு களையும், பணியாளனிடம் கொடுத்து, "கவனமாக கேள்... தகுதியுள்ள, கண்ணியமான மனிதன் ஒருவனுக்கு, இந்த கனமான றொட்டியைக் கொடு; மற்றொரு றொட்டியை, ஒரு சாதாரண பிச்சைக்கார னுக்குக் கொடு..." என்று கூறினார்.

நீண்ட மேலங்கி அணிந்து, அடர்ந்த தாடியுடன், சாமியாரைப் போல் தோற்றமளித்த ஒரு நபருக்கு, அந்த வைரக்கற்கள் நிரம்பிய, கனமான றொட்டியை அளித்தான் பணியாளன். மற்றொன்றை, ஒரு பிச்சைக்காரனுக்கு அளித்தான். அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்த்தபடியே இருந்தார் மன்னர்.

சாமியார் போன்று தோற்றமளித்த நபர், தனக்கு கிடைத்த றொட்டியை உற்றுப் பார்த்தார்.

"இது, சரியாக, பக்குவப்படுத்தப் படாததால், கொஞ்சம் கனமாக உள்ளது" என்று எண்ணி, தன் அருகில் வந்த பிச்சைக்காரனை அழைத்து, "நண்பா... எனக்கு கிடைத்த றொட்டி கனமாக உள்ளது; எனக்கு அவ்வளவு பசியில்லை; அதனால், இதை நீ எடுத்துக் கொள்; உன்னுடையதை எனக்கு கொடு..." என்றார்.

உடனே, தங்களுடைய றொட்டிகளை மாற்றினர்.

இதைக் கண்ட மன்னர், "ஆஹா... என்ன கடவுளின் உள்ளம்! ஒரு தவ யோகிக்கு செல்வம் தேவை இல்லையாதலால், வைரக்கற்கள் உடைய றொட்டி, அவரிடம் தங்காமல், அந்த ஏழையிடம் சென்று விட்டது" என்று நினைத்தார்.

உடனே, அந்த சாமியாரையும், பிச்சைக் காரனையும் பின் தொடருமாறு, தன் வேலையாட்களுக்கு உத்தரவிட்டார்.

அன்று மாலை, அவ்விருவரைப் பற்றிய தகவல்களும், மன்னருக்குக் கிடைத்தன.

சாமியார் போல் தோற்றமளித்தவர், தன் வீட்டுக்குச் சென்று, பொய் தாடியையும், மேலங்கியையும் எடுத்து விட்டு, ஆசை தீர ரொட்டியை உண்டு, பின், பழையபடி தாடியை ஒட்ட வைத்து, சாமியார் வேடத்தில், பிச்சை எடுக்க, கிளம்பி விட்டதாக அறிந்தார்.

வீட்டிற்குச் சென்ற பிச்சைக்காரனோ, தன் மனைவியுடன், றொட்டியை உண்ணத் தொடங்கியதும், அதற்குள் இருந்த வைரக் கற்களைக் கண்டான்.

மகிழ்ச்சியில் துள்ளிய அவன் மனைவி, அவற்றை தாங்களே எடுத்துக் கொள்ள விரும்பிய போதும், அந்த பிச்சைக் காரன், 'இந்த வைரக் கற்களை வைத்து, கடவுள் என் மனசாட்சியை சோதிக்க விரும்புகிறார்.

"இந்த ரொட்டியை அளித்த அரசு பணியாளருக்கு, இதில் வைரக்கற்கள் இருப்பது தெரியாது என்றால், அவருடைய பொருளை அவரிடமே சேர்க்க வேண்டும்; தெரிந்தே கொடுத்தார் என்றால், இவை, அந்த சாமியாரை சேர வேண்டும்; அது தான் நியாயம்..." என்றான்.

அந்த பிச்சைக்காரரனின் நேர்மையான, உயர்ந்த உள்ளத்தை அறிந்த மன்னர், அவனை, அரண்மனைக்கு அழைத்து, வைரக்கற்களை அவனுக்கே கொடுத்து, மேலும், பல பரிசுகளும் வழங்கினார்.

கடவுளின் அருளால், வைரக்கற்கள் போலி சாமியாரிடம் சிக்காமல், நேர்மையான ஒரு பிச்சைக்காரனை அடைந்ததை எண்ணி மகிழ்ந்தார் மன்னர்.

பிச்சைக்காரனும், அதை விற்று, கிடைத்த பணத்தில், வியாபாரம் செய்து, சந்தோசமாக வாழ்ந்தான்.

---

## மதுபோதையில்...

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று. அவர்களில் ஒருவர் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது வாகனம் செலுத்தியதால் அவருக்கு அதற்காகவும் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மது போதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை என்பவற்றுக்காக யாழ்ப்பாணத்தில் அதி கூடிய தண்டம் விதிக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மது போதையில் சாரத்தியம்செய்த குற்றச்சாட்டில் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கோப்பாய் பொலிஸ் பிரிவில் ஒருவர் மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காகக் கைது செய்யப்பட்டார். இவர்கள் ஐந்து பேருக்கும் எதிராக நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஐந்து பேரும் ஏற்றுக் கொண்டனர். ஐந்து பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று. கோப்பாய் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாததால் அதற்கும் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மற்றொருவருக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அவருக்கு 12 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. ஐந்து பேரின் சாரதி அனுமதிப் பத்திரங்களையும் ஒரு மாத காலத்துக்குத் தடுத்து வைக்கவும் நீதிமன்று உத்தரவிட்டது. (எ)

### பெயர் மாற்றம்

இல.19.2 ஆம் குறுக்குத்தெரு பாஷையூரைச் சேர்ந்த **வடிவேலு ரோசானி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **றொசானி** எனப் பெயர்மாற்றி இனி வரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் ஜனநாயக சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**றொசானி**

## இராணுவம்...

இவ்வாறு நிலங்களை ஆக்கிரமித்திருப்பது பெரும் அநீதி. அது சமானத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தாது.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பலாலி வானூர்தித் தளத்தைப் பன்னாட்டுத் தரத்துக்கு உயர்த்தும் அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுப் பலாலியில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்குப் பிரதேசம் போர்க் காலத்திலும், இப்போதும் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு ஒரு இராணுவப் பிரதேசமாகத்தான் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் மீண்டும் நிலங்களைக் கைப்பற்றுவதற்கு சுற்றுலாத் தளங்களையும், இராணுவத்தையும் சுட்டிக் காட்டி, நகுலேஸ்வரம், மற்றும் காங்கேசன் துறையில் இருக்கிற இராணுவ விடுதி, தல்சவென, அதைசுற்றியுள்ள நிலங்கள், சீமெந்து தொழிற்சாலை என்பன ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

30 ஆண்டுகளுக்குபின்னரும், போர் முடிந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னரும் தமிழ் மக்களுடைய நிலங்களை நீங்கள் இன்னும் விடுவிக்காது வைத்திருப்பது மிகவும் அநீதி. அந்த நிலங்களை நீங்கள் விட வேண்டும். நிலங்களை அபகரிப்பதும், நிலங்களை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் சமாதானத்தையோ, இந்த நாட்டின் பாதுகாப்பையோ ஏற்படுத்தாது.

இந்திய தலைமை அமைச்சர் இந்த நாட்டுக்கு வந்தபோது இலங்கைக்கு விடுக்கப்படுகின்ற பாதுகாப்பு எச்சரிக்கைகள், இந்தியாவுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை என்று சொல்லியிருக்கிறார். நான் இந்த இடத்திலே அரசதரப்புக்கு, முக்கியமாக அமைச்சர் அர்ஜுனரணதுங்கவுக்கும், இராணுவத் தளபதிக்கும் சொல்லிக்கொள்வது என்னவென்றால் நாங்கள் அரசியல் தீர்வைப் பெற வேண்டும். இந்த நிலங்களை விடுவிக்கவேண்டும். நீங்கள் இந்த நிலங்களைப் பிடிப்பதால் சமாதானத்தை அடைய முடியாது. அது எங்களுடைய பிரதேசத்துக்கும், இந்த நாட்டுக்கும் பாதுகாப்பைத் தராது- என்றார். (எ-21,26)

## தூக்கை...

நபர் தீர்மானம் ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல லால் பண்டாரிகொடவால் இந்தத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் இந்தத் தீர்மானத்தை அவர் கையளித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் நாடாளுமன்றில் விவாதத்துக்கு உட்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, போதைப் பொருள் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். அதற்குப் பல தரப்புக்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அரச தலைவரின் இந்த அறிவிப்புக்கு எதிராகப் பலர் நீதிமன்றங்களில் மனுக்களையும் தாக்கல் செய்துள்ளனர். தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு நீதிமன்றமும் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இந்தநிலையில் தற்போது நாடாளுமன்றில் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

### 45 ஆம் நாள் நினைவு

தோற்றம்
02
03
1985



மறைவு
24
05
2019

**திருமதி அனுஜா காண்டீபன்**

கடந்த 24.05.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி அனுஜா காண்டீபன் அவர்களின் 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

### மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி
**அப்புத்துரை தில்லைநாயகி**
(SLTS-I SP-Tri-Pri)

எமது பாடசாலையில் 15 ஆண்டுகளாக ஆசிரியப் பணியாற்றி இன்றுடன் தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெறும் எமது ஆசிரியரை அவரின் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**
28.03.1990 - 31. 01. 2004 - யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை
01.02.2004 - இன்றுவரை - யா/அத்தியார் இந்துக்கல்லூரி

Best Wishes


வாழ்த்துவோர்
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/அத்தியார் இந்துக்கல்லூரி.**

Best Wishes

# சாவுத் தண்டனை தேவையா? இல்லையா?

எஸ். யேசுதாஸ்

போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்குச் சாவுத்தண்டனை நிறைவேற்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள முடிவு தொடர்பாக மக்கள் சிலரிடம் கேட்டறிந்த கருத்துக்கள்.




**1.எஸ்.குமார், வயது - 40, வாகன திருத்துநர்.**
போதைப்பொருள் வருகை, விற்பனை, பாவனைகளால் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். குடும்பங்களில் அமைதியின்மை தோன்றுகின்றது. தன்னிலை மறந்து பெரும் தவறுகளைச் செய்யும் கொடூர மனப்பாங்கை போதை தோற்றுவிக்கிறது. தற்காலத்தில் பல சமூகச் சீரழிவுகளுக்கு அடிப்படைக் காரணமாக போதைவஸ்துப் பாவனைப் பரம்பலே காணப்படுகிறது. எனவே சமுதாயத்தையும் நாட்டையும் சீர ழி க்கும் போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு சாவுத்தண்டணை நிறைவேற்று வதில் தப்பில்லை. ஆயுள் தண்டனையில் சிறச்சாலைகளில் வைத்துப் பராமரிக்கும் செலவை ஏழைகளுக்குக் கொடுக்கலாம்.

**02.திருச்செல்வம், வயது -74 , விவசாயி**
சாவுத்தண்டனை நிறைவேற்ற வேண்டும். பாடசாலைப் பிள்ளைகள் , இளையோர், போதைப்பொருள்களால் ஈர்க்கப்பட்டு தவறான வழிகளில் செல்கின்றனர். திடீரெனப் பணம் சம்பாதக்கும் கீழ்த்தர நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்தச் சட்டவிரோத செயல் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்போது ஏனையோர் திருந்தி தொழிலைக் கைவிட நேரிடும்.

**3. ம.டெரன்ஸ், வயது - 59, அரச உத்தியோகஸ்த்தர்**
சாவுத் தண்டனையைத் தவிர்த்து அதிகபட்ச ஆயுள் தண்டனையை வழங்கலாம். ஏனெனில் உயிரை எ்டுக்கும் அதிகாரம் படைத்தவனைத் தவிர வேறு எவருக்கும் இல்லை. சாவுத் தண்டனை நிறைவேற்றும் போது குற்றவாளியின் நினைவும் மறக்கப்படுகின்றது. ஆயுள் சிறை வாழ்வை அறிந்து அவரது சகார்களும் ஏனையோரும் திருந்த வழி ஏற்படும்.

**04. ஆ.செல்வம், வயது - 70**
குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இவர்களால் நிறையக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இளைய தலைமுறை அழிக்கப்படுகின்றது. இது சாதாரண குற்றமல்ல. சாவுத் தண்டனை வழங்கப்படும் போது உயிர் அச்சத்தால் போதைக் குற்றங்களில் ஈடுபடுவது குறைவடையும்.

**05. து. புஸ்பராணி, வயது - 57, வியாபாரி**
நாங்கள் நாங்களாக இருந்தால் போதைப்போருள் எப்படி எம்மிடையே பரவும்? வாழும் உரிமையை மறுத்து ஆண்டவன் படைத்த உயிரை மனிதன் பறிக்க முடியாது. ஆயுள் தண்டனையை வழங்கி ஏனையோர் திருந்த வழி காட்டலாம்.

**06. யோ.செபமாலை, வயது -70 , மேசன் தொழிலாளி**
கொலை, கொள்ளை, வாள்வெட்டு, குடும்பப் பிணக்குகளுக்கு காரணமான போதைப், பபொருள் கடத்தல் குற்றவாளிகளுக்குச் சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். அப்போது தான் ஏனையோர் திருந்துவர்.

**07. ம.வசந்த சீலன், வயது -24 ,சமூக ஆர்வலர்.**
போதைப்பொருள் பாவனையால் பாடசாலை மாணவர்கள் கூட கவரப்பட்டு கல்வியில் ஆர்வம் இன்றி தமது எதிரிகாலத்தையே கேள்விக்குறியாக்கும் அளவுக்கு நெறி பிறழ்வில் செல்கின்றனர். மனிதத்திற்கெதிரான தொழிலில் ஈடுபடுவோர் நிச்சயமாக தண்டிக்கப்படவேண்டும். சாவுத்தண்டனை வாழ்வோருக்குப் பாடமாக அமையும்.

**08. தி.மைக்கல், வயது - 69, தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்.**
மனிதனை மனிதன் கொல்ல அதிகாரம் இல்லை. எந்தக் குற்றமாக இருந்தாலும் உலகத்தில் செய்த குற்றத்திற்கான தண்டனையை உலகத்தில் இருந்தே அனுபவிக்க வேண்டும். சாவுத் தண்டனை என்னும் அநாகரீகமான தீர்வை உலகம் வெறுக்கிறது. கோடிக்கணக்காண சொத்துக்களை கொள்ளையடித்த அரசியல் வாதிகள் சுகபோக வாழ்வு வாழ்கின்றனர். போதைப்பொருள் நாட்டுக்குள் நுழைவதற்கு பெரும்புள்ளிகளின் ஒத்துளைப்பும் இருப்பதாக அறிய முடிகிறது. குற்றவாளிகளைக் கட்டுப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**09.ஜெ.ஜெமெல்டா, வயது 38 - ஆசிரியர்.**
போதைப் பொருள்களின் வர்த்தகமும் பாவனையும் பாரதூரமான குற்றச் சாட்டுக்களாகும். இது எவ்வாறு நாட்டிற்குள் வருகிறது என்பதைக் கண்டறிந்து தடுக்கும் போது சாவுத் தண்டனை விதிக்கவும் , நிறைவேற்றவும் வேண்டிய தேவை இருக்கிறது. திறமை வாய்ந்த முப் படைகளைக் கொண்ட எமது நாட்டின் பாதுகாப்புப் பிரிவினரின் கண்காணிப்பு சோதனை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு போதையற்ற பாதுகாக்க பாடுபட வேண்டும். பொதுமக்கள் இளைய தலைமுறையினரும் விழிப்புடன் செயற்பட்டு போதை அரக்கனை நாட்டில் இருந்து விரட்ட ஒத்துளைத்தால் சாவுத் தண்டனை சாவடைந்து விடும்.

# நீதி நிலைநாட்டப்படாத நாட்டில் சுபீட்சத்தை எதிர்பார்க்க முடியாது

ருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தொடரப்பட்ட வழக்கில் குற்றம்சா ட்டப்பட்ட அனைவரும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டமை பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

ஏதுமறியாத அந்த அப்பாவி இளைஞர்களின் கொலைக்கு காரணமாக இருந்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த நாட்டைப் பொறுத்த வரையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் ஏராளமாக இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் சுதந்திரமாகத் திரிவதைக் காண முடிகின்றது. கொலைக் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பானதொரு நாடாகவே இலங்கையைக் கருத வேண்டியுள்ளது. இங்கு ஏராளமான கொலைகள் இடம்பெற்றபோதிலும் இவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படாத நிலையே இங்கு தொடர்கின்றது. இதற்கு யாரைக் குற்றம் சுமத்துவது என்பது தெரியவில்லை. ஆட்சியாளர்கள் பொறுப்புடனும், நேர்மையாகவும் செயற்பட்டால் மாத்திரமே இதைச் சீர்செய்ய முடியும்.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் ஏராளமான குற்றச் செயல்கள் இடம்பெற்றன. கொலை,ஆள்களைக் கடத்திச் சென்று காணாமல் போகச் செய்தல்,சித்திரவதைகள்,பாலியல் வன்முறைகள் ஆகியன தாரளமாகவே இடம்பெற்றன. அப்போதைய அரசு இவை தொடர்பாகக் காத்திரமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. அதிலும் தமிழர்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு எதிராக எதுவுமே இடம்பெறுவதில்லை. இறுதிப் போரின் போது பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமை உலகறிந்த விடயமாகும். இதன் காரணமாகவே ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானமும் நிறைவேற்றி வைக்கப்பட்டது. போர்க் குற்ற விசாரணைகள் நியாயமான வகையில் இடம்பெற வேண்டுமெனவும் வலியுறுத்திக் கூறப்பட்டது. ஆனால் இலங்கை அரசு கால அவகாசத்தைக் கேட்டு காலத்தை இழுத்தடித்து வருகின்றது. வெளிநாடுகள் பலவும் போர்க் குற்றம் தொடர்பாக நீதியான விசாரணை இடம்பெற வேண்டுமென வலியுறுத்திய போதிலும் அரசு அதைக் கவனத்தில் கொள்ளவில்லை.

படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லையெனவும் விடுதலைப்புலிப் போராளிகள் எவரும் படையினரிடம் சரணடையவில்லையெனவும் இதனால் படையினர் மீது போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறத் தேவையில்லையெனவும் அரசின் சார்பிலும், படைத்தரப்பினராலும் கூறப்படுவதை ஏற்க முடியவில்லை. பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் இறுதிப் போரின் போது கொல்லப்பட்டமைக்கு உறுதியான சான்றுகள் உள்ளன. இதைப் பூசி மறைப்பது இலகுவான காரியமல்ல. அது மட்டுமல்லாது படையினரால் தமிழ்ப் பெண்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான காணொளி ஆதாரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிலையில் போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லையெனவும், படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லையெனவும் எவ்வாறு கூற முடியும்?

வெளிநாடுகளைப் பொறுத்த வரையிலும் இலங்கை விவகாரத்தில் அக்கறையற்றதொரு போக்கையே வெளிக்காட்டி வருகின்றன. அவை போர்குற்ற விசாரணையை வலியுறுத்தி நிற்கும் போது இலங்கை அரசு அதைத் தட்டிக் கழிக்க முடி யாது. ஆனால் இதுவரையில் அவ்வாறு எதுவுமே இடம்பெறவில்லை. இதன் காரணமாகவே இலங்கை அரசு தனது இஷ்டம்போன்று செயற்பட்டு வருகின்றது.

இறுதிப்போர் இடம்பெற்றபோது முப்படைகளையும் வழி நடத்திச் செல்கின்ற பூரண அதிகாரங்களை கோத்தபாய ராஜபக்ச கொண்டிருந்தார். இவ்ரது வழிகாட்டலின் பிரகாரமே படைகள் செயற்பட்டன. ஆகவே இவர் மீதும் போர்க் குற்ற விசாரணை இடம்பெற வேண்டும். ஆனால் அரச தலைவர் தேர்தலில் கோத்தபாயவின் பெயர் பலமாக அடிபடுவதைக் காண முடி கின்றது. மேலும் இவருக்கு எதிராக வெளிநாட்டு நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் பதிவாகியுள்ளன. இவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்குள்ள நீதிமன்ற மொன்று இவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டவழக்குத் தொடர்பான அழைப்பாணையை நேரில் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதைவிட பிரபல பத்திரிகையாளர் லசந்தவின் கொலை தொடர்பாக இவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வேறு பலர் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டதிலும் ஒரு சிலர் கொலை செய்யப்பட்டமை. தொடர்பாகவும் இவர் மீது குற்றச்சாட் டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது உள்ளூரில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடி தொடர்பாகவும் இவர் வழக்கு விசாரணைகளை எதிர்கொண்டு வருகின்றார். ஆனால் அரசு குற்றவாளிகளுக்கு அடைக்கலம் வழங்கும் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது.

நீதிநிலை நாட்டப்படாத எந்தவொரு நாடும் சுபீட்சத்தைக் கண்டதாகச் சரித்திரம் கிடையாது. இலங்கையும் அவ்வாறானதொரு நிலையில் உள்ளமை கவலைக்குரியது.

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM
சனிக்கிழமை 06 ஜூலை 2019



## வடக்கு, தெற்கு ஒற்றுமை நாட்டுக்கு மிக அவசியம்

### சபாநாயகர் கரு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

வடக்கையும், தெற்கையும் பிளவுபடுத்தும் செயற்பாடுகளுக்கு முடிவு கட்ட வேண்டும். நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்த மொழி இன்றியமையாததாகும்.

இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழிகள் வார இறுதிநாள் நிகழ்வு கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இனவாத நோக்குடனான கருத்துக்களே நாட்டில் வன்முறையைத் தூண்டுகின்றன. சிறந்த எதிர்காலத்துக்கு வடக்குக்கும், தெற்குக்கும் இடையே ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைய வேண்டும்.

அரச கரும மொழிகள் அமைச்சின் ஊடாக சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக அமைச்சர் மனோ கணேசனால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் வரவேற்கத்தக்கவை. நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்த மொழி இன்றியமையாததாகும். என்றார்.

(எ)

## வடமாகாண ஆளுநருக்கு வரலாறு தெரியவில்லை!

### மாவை. எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே தடையாக உள்ளார் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கூறியிருப்பாராயின் அவர் வரலாறு தெரியாதவர்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

பலாலி வானூர்தித் தளத்தைப் பன்னாட்டுத் தரம் வாய்ந்த வானூர்தி நிலையமாக மாற்றும் அபிவிருத்திப் பணிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்றுப் பலாலியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது

சீமெந்து தொழிற்சாலை தொடர்பாக இன்று ஒரு செய்தி பார்த்தேன். சிமெந்துத் தொழிற்சாலை மீண்டும் இயங்குவதற்கு நாங்கள் தடையாக இருக்கிறோம் என்று ஆளுநர் சொன்னார் என்று கேள்விப்பட்டேன். பத்திரிகைச் செய்தி சரியோ பிழையோ தெரியாது. ஆளுநர் அவ்வாறு கூறியிருந்தால் அவருக்கு வரலாறு தெரியாது என்றே நினைக்கின்றேன்.

2016ஆம் ஆண்டு புதிய ஆட்சி வந்ததன் பின்னர் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொங்கலுக்கு தலைமை அமைச்சர் வந்திருந்தார். அப்போது பலாலி விமான நிலையத்தில் பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கு பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படவேண்டும் என்று நாம் கேட்டிருந்தோம். தொடர்ச்சியாகக் கேட்டுவந்தோம். இந்தியா அதைச் செய்து தரவேண்டும் என்றும் கேட்டிருந்தோம். இராஜராஜேஸ்வரி ஆலயத்தில் அடுத்ததாக நாங்கள் எடுத்த தீர்மானம் சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான்.

சிமெந்து தொழிற்சாலை மிக மோசமாக அழிக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயங்க வைப்பதில் எமக்கு பாதகங்கள் பல இருக்கின்றன. ஏற்கனவே நிலத்தடி நீர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் சுண்ணாம்புக் கற்களை அகழமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என்பதைக் கூறியிருந்தோம். கிளிநொச்சி கிராஞ்சியில் நிலம் ஆராயப்பட்டது.

இப்பொழுது மன்னாருக்குச் செல்கின்ற வழியில் மடுமாதாவுக்கு மேற்குப் பக்கமாக பரப்புக்கடந்தான் எனும் இடத்தில் சிமெந்துத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காகச் சுண்ணாம்புக் கற்பாறைகள் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சிமெந்துத் தொழிற்சாலைக்குரிய நிலம் கிட்டத்தட்ட 330 ஏக்கரில் தொழில் மையத்தைத் சார்ந்த துறைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. கடற்படையினருக்கும், இராணுவத்தினருக்கும் ஒரு தொகுதி நிலம் வேண்டும் என்றபோது அதை அடையாளம் காட்ட வேண்டும் என்று அந்த அமைச்சரவைப் பத்திரத்திலே நாங்கள் கேட்டிருக்கிறோம். அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் சிமெந்து தொழிற்சாலையை தொடங்குவதற்கு தடையாக இருக்கிறோம் என்பது உண்மையல்ல. ஆளுநருக்குத்தான் வரலாறு தெரியாமல் இருக்கிறது. என்றார்.

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் பாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெற்ற வட்டமேசை கலந்துரையாடலில் வடக்கு மாகாண பொருளாதாரம் பற்றி ஆராயப்பட்டது.

சிவில் அமைப்பைச் சேர்ந்த ஒருவரால் காங்கேசன்துறைச் சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஆளுநரிடம் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஆளுநர் தான் அதை ஆரம்பிப்பதற்கு தயாராக உள்ளேன் என்றும், அதை ஆரம்பிக்க விடாது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே தடையாக உள்ளார் அவரிடம் போய்க் கேளுங்கள் என்று கூறியிருந்தார் என்று தகவல்கள் வெளிவந்திருந்தன.

(எ-21,26)

## தீயில் எரிந்து படுகாயம் அடைந்த பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

தீயில் எரிந்து படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அராலி கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ச.அரிது (வயது-32) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி இரவு 10 மணியளவில் வீட்டுக்கு வந்த இந்தப் பெண்ணின் கணவர் உணவுக்காக மனைவியை அழைத்ததோடு, அவரைக் கடுமையாகத் தாக்கினார் என்றும், தலையில் தாக்கப்பட்ட மனைவி மயங்கி விழ, கணவர் மண்ணெண்ணை ஊற்றித் தீ மூட்டினார் என்றும் கூறப்படுகின்றது. அதை அவதானித்த 14 வயது மகன் ஓடிச் சென்று தீணை அணைக்க முயன்றார் என்றும், தந்தை கையைப்ப பிடித்துத் தடுத்தார் என்றும், தந்தையயின் கையைக் கடித்துவிட்டுத் தப்பிச் சென்ற மகன், நீர் ஊற்றித் தீயை அணைத்தார் என்றும் கூறப்படுகின்றது.

அயலில் உள்ளவர்களின் உதவியோடு பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(எ-105)

## வீடமைக்க வழங்கும் நிதி போதுமானதாக இல்லை

### வ்லி. வடக்கு மீள்குடியர்வுக் குழு அமெ. பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 6

மீள்குடியமர்வுப் பிரதேசங்களில் தற்போது அமைக்கப்படும் வீடுகளுக்கு 10 லட்சம் ரூபா அனுமதிக்கப்படுகின்றது. ஆனால் வீடு அமைப்பதற்கு 14 லட்சம் ரூபா தேவைப்படுகின்றது என்று அமெரிக்க செனட் பிரதிநிதிகளிடம் வலி. வடக்கு மீள்குடியமர்வுக் குழுவின் தலைவர் குணபாலசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் அமெரிக்க செனட் பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்திருந்தது. அந்தக் குழுவினர் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் சந்திப்பு ஒன்றை நடத்தினர். மயிலிட்டித் துறைமுகப் பகுதியில் மீள் குடியமர்ந்துள்ள மக்களையும் அவர்கள் சந்தித்தனர். அந்தச் சந்திப்பில் மீள் குடியமர்வுக் குழுவினரும் பங்கேற்றனர். அதன் போதே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் மயிலிட்டித் துறைமுகம் உட்படச் சில பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் முழுமையான அழிவடைந்துள்ள அந்தப் பகுதியில் உடனடியாக மீள்குடியமர்வது சாத்தியமானதாக இல்லை. எந்த வித வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்படவில்லை. பொது மக்களுக்குச் சொந்தமான பெரும் தொகை நிலங்கள் இன்னமும் படையினர் வசமே உள்ளன. அவை விடுவிக்கப்படவில்லை என்றும் அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ-105)

## குடும்பஸ்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

முல்லைத்தீவு, முள்ளியவளைப் பிரதேசத்தில் காஞ்சிரமோட்டையில் குடும்பத் தலைவர் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முள்ளியவளையைச் சேர்ந்த ச. சத்தியபவான் (வயது-45) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். விவசாயக் கிணற்றில் சடலத்தைக் கண்ட விவசாயிகள் முள்ளியவளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு மாஞ்சோலை மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ-ரி3)

## ஒன்றிணைந்த எதிரணி அச்சமடைந்து விட்டது

### கபீர் ஹாசீம் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 6

சிறி லங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணியினர் ஐக்கிய தேசிய முன்னணியிடம் தோல்வி அடைந்து விட்டனர். அச்சத்தின் காரணமாகவே ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை அறிந்துக்கொள்ள எதிரணியினர் ஆவலாக உள்ளனர் என்று அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சஜித் பிரேமதாசவை களமறக்குவது தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள கருத்து அது அவரின் நிலைப்பாடாகும். அது கட்சியின் இறுதி தீர்மானமாக அமையாது. சகலரதும் நிலைபாட்டை கவனத்தில் கொண்டு கலந்துரையாடியதன் பின்னர் இறுதி தீர்மானம் எடுப்போம். மக்களின் நிலைப்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்ந்த பின்னரே இறுதி தீர்மானம் எடுப்போம். என்றார்.

(எ-31)

# சமுர்த்தி உரிமம் வழங்கும் நிகழ்வில் வவுனியாவில் 36 லட்சம் ரூபா இலாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

**வவுனியா மாவட்டத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப் படிவம் வழங்கிய நிகழ்வு மூலமாக மத்திய சமுர்த்தி அதிகார சபைக்கு 36 லட்சத்து 32 ஆயிரத்து 595 ரூபா 20 சதம் இலாபமாகக் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

வவுனியா சமுர்த்தித் திணைக்களத்தில் தகவல் அறியும்சட்டத்தின்கீழ்பெறப் பட்ட தகவலில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்துக் குப் புதிதாக கடந்த மாதம் தொடக்கம் 11 ஆயிரத்து 551 பேருக்கு சமுர்த்தி உரிமக் கொடுப்பனவு வழங்கப்பட் டிருந்தது.


அந்த நிகழ்வுக ளுக்குப் பல லட்சம் ரூபா செலவு செய் யப்பட்டது. இந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கிய நிகழ்வுக்கு 21 லட்சத்து 42 ஆயிரத்து 904 ரூபா 80 சதம் செலவு செய்யப்பட்டுள்ளது.

மொத்தச் செலவில் உபசர ணைக்காக 6 லட்சத்து 18 ஆயிரத்து 729 ரூபா, விழா ஒழுங்கமைப்புக்கு 24 ஆயிரத்து 275 ரூபா, செலவு செய்யப்பட்டுள் ளது.

உச்ச பட்சமாக மாங்கன்று விநியோகத்துக்கு 15 லட்சம் ரூபா செலவு செய்யப்பட் டுள்ளது.

இந்த வகையில் 11 ஆயி ரத்து 551 புதிய சமுர்த்திப் பயனாளிகளிடமிருந்து தலா 500 ரூபா வீதம் 57 லட்சத்து 75 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டது. நிகழ் வுக்காக 21 லட்சத்து 42 ஆயிரத்து 904 ரூபா 80 சதம் செலவிடப்பட மேலதிக மாக கிடைத்த 36 லட்சத்து 32 ஆயிரத்து 585 ரூபா 20 சதம் அதிகார சபைக்கு இலாபமாகக்கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத் தைச் சேர்ந்தவர்களுக்கு நடத்திய இதே நிகழ்வில் மத்திய சமுர்த்தி அதிகார சபைக்கு 5 லட்சத்து 28 ஆயி ரத்து 238 ரூபா 09 சதம் இலாபமாக கிடைத்துள்ளது. மன்னாரி லும் சுமாராக இதே அளவு இலாபம் கிடைத்துள்ளது என்று தெரி விக்கப்பட்டது. (த-105)



## மாட்டுக் கொட்டகையில் தீ இரண்டு மாடுகள் இறந்தன

வவுனியா, ஜூலை 6

வவுனியா, பட்டக்காடு பகுதியில் மாட்டுக் கொட்டகை ஒன் றில் ஏற்பட்ட திடீர் தீ காரணமாக இரண்டு மாடுகள் உயிரி ழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுஅதிகாலை 1.30 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

மாட்டுக் கொட்டகையில் தீ பிடித்து பெரியளவில் பற்றி எரிந் தபோதே அயலவர்கள் அதைக் கண்டுகொண்டனர்.

நகர சபையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்தனர். தீ பரவாமல் இருக்க நடவடிக்கை எடுத்தனர். எனினும், மாட்டுக் கொட் டகை முற்றாக எரிந்து நாசமாகியது. அதில் கட்டப்பட்டிருந்த இரண்டு மாடுகள் உயிரிழந்துள்ளன.

தீ ஏற்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. வவுனியாப் பொலிஸார் இது பற்றி விசாரணை நடத்துகின்றனர். (த)



# பிள்ளையார் கோவிலை பௌத்தமயமாக்குவது நிலைமாறுகால நீதியா?

*வலி.கிழக்குத் தவிசாளர் கேட்கிறார்*

யாழ்ப்பாணம், ஜூலை 6

இராணுவ மயமாக்கத்தின் மூலம் அபகரிக்கப்பட்ட நிலங்களில் பௌத்த சிங் கள மயமாக்கம் இடம்பெறு வதையா நிலைமாறுகாலம் என்றனர்! பயன்படுத்தப்ப டும் அரசியல் கலைச்சொற் களுக்கும் செயற்பாட்டுக் கும் இடையில் எல்லாமே சுத்த சூனியமாகக் காணப் படுகிறது என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவி சாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியா ழக்கிழமை ஆக்கிரமிப்பிற் குள்ளாகியிருக்கும் முல் லைத்தீவு நிராவியடி பிள் ளையார் கோவில் மற்றும் கிழக்கு மாகாணத்தில் ஆக் கிரமிப்புக்களுக்கு உள்ளா கிவரும் தமிழரின் பூர்வீகக் கிராமமான தென்னைமர வாடிபகுதிகளுக்குச்சென்று அங்கு மக்கள் சந்திப்புக்க ளில் கருத்துரைக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:

தமிழ் மக்களின் வரலாற்று ரீதியிலான நிலங்கள், பண் பாடுகள், கலாசாரம், இன ரீதியிலான இருப்புப் போன் றவை வெளித்தொடர்புகள் அற்ற பகுதிகளில் சாதாரண மாக அழித்துவிடுவதற் கான உத்திகள் இன்றும் தொடர்கின்றன.

கடந்த காலத்தில் இராணு வம் கைப்பற்றி வைத்தி ருந்த நிலத்தை உரியவர்க ளிடம் கையளிப்பதே நிலை மாறு காலநீதிக்குப் பொருத் தம். எனினும் இங்கிருக்கக் கூடிய இனவிரோத எண் ணப்பாடுடைய பௌத்த துறவிகள் முல்லைத்தீவு மற்றும் நாம் தற்போது வருகை தந்துள்ள தென் னைமரவாடி பகுதிகளில் கச்சிதமாக சிங்கள மயமாக் கத்தையும் தமிழரின் வர லாற்று அழிப்பையும் மேற்கொள்கின்றனர். மக்க ளைப் பொறுத்தளவில் எமது நிலம் எமக்கே என்ப தில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் மரபுவழித் தாயகமான வடக்கையும் கிழக்கையும் தூண்டுவதற் கான நுட்பமான காரியங் கள் நடைபெறுகின்றன. இவற்றை நோக்குகையில் போருக்குப் பின்பான நிலைமாறு கால நீதிக்குரிய காலப்பகுதியாக உயர் மட் டங்களில் கூறி வரப்படும் கருத்துக்களின் அடிப்படை என்ன எனக் கேட்கத் தோன்றுகின்றது.

தமிழரின் வரலாற்றுப் பூர் வீக நிலத்தில் அமையப் பெற்ற நீராவியடிப் பிள்ளை யார் கோவிலின் வளா கத்தை பௌத்த வளாக மாக மாற்ற முயற்சிக்கப்படு கின்றது. இந்தநிலையில் நீதித்துறையின் தீர்ப்பின் வாயிலாக மக்கள் தீர்ப்பைப் பெறவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. இவற் றுக்கு மேலாக தென்னைம ரவாடி பகுதியில் வரலாற்று ரீதியில் பரம்பரை பரம்பரை யாக எம்மவர்கள் கந்தசாமி மலையில் வழிபட்டு வந்த வழிபாட்டுத்தலம் தொல்லி யல் திணைக்கள ஆதிக்கத் தின் ஊடாகதிரைமறைவில் சிங்கள பௌத்த மயமாக் கத்துக்கான கைங்கரியங் கள் தொடர்ச்சியாக நடை பெற்றுவருவதைக் காணக் கூடியதாக உள்ளன.

தமிழ்மக்களின் இவ்வாறான வரலாற்றுக் கிராமங்களில் நிலங்கள் பௌத்த விகாரை களுக்கும் சிங்களக்குடியேற் றத்துக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி வழங்கப்படு கின்றன. இதுதான் தொடர் கதையாகியுள்ள சூழ்நிலை யில் நிலைமாறு காலம் என வும் நல்லிணக்கம் எனவும் நாட்டில் கூறப்படுவதன் அடிப் படை எவருக்குமே புரியாத சூனியமாகக் காணப்படு கிறது - என்றார். (த)

## வள்ளிபுனத்து ஆலமரம் நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

ஆ.முல்லைத்திவ்வியன் எழுதிய வள்ளிபுனத்து ஆல மரம்நூல்வெளியீட்டுநிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை மக்கள் படிப்பக முன்பள்ளி முன்ற லில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக முன் னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்ச.சுகிர்தன், பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் அரியகு மார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஆ.முல் லைத்திவ்வியனின் ஒன்ப தாவது நூலாக இது வெளி யிடப்படவுள்ளது. (ஜ-173)





## வணிக தின நிகழ்வுகள்

கொடிகாமம், ஜூலை 6

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வணிக தின நிகழ்வுகள் நேற்று பாடசாலையில் வணிக ஆசிரியர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக போக்கட்டி அ.த.க பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், சுயதொழில் முயற்சியாளர் சி.சிவ னேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159 -9)


## சங்குமுழுக்கு பெருவிழா

யாழ்ப்பாணம் எழுதுமட்டு வாழ் விளுபளை சிறி மீனாட்சி அம்பாள் கோவி லில் ஆயிரத்து எட்டு சங்கு முழுக்குப் பெருவிழா நாளைமறுதினம் திங்கட் கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள் ளது. சிறிசக்தி கிரியா குரு மணி சிவசிறி இ.குமார சுவாமிக் குருக்கள் தலை மையில் கிரியைகள் நடை பெறும். என்றுஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ -9)



## முரசொலி சனசமூக நிலைய 71ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம் கதிரிப்பாய் முரசொலி சன சமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந் தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவன் கலந்துகொண்டார். (ஜ)





# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கூட்டமைப்பு கரிசனையுடனே உள்ளது

## சரவணபவன் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும், அவர்களுடைய உறவினர்கள் தொடர்பாகவும், அவர்களுடைய எல்லா நலன்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதனுடைய ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கரிசனையாகத்தான் உள்ளனர் என்று அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனிடம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 16ஆவது பேராளர் மாநாடு இடம்பெற்ற இடத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளில் சிலர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளித்து தெரிவித்ததாவது:

எங்கேயோ ஓர் இடத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் பிழையாக வழிநடத்தப்படுகிறார்கள் என்று நினைக்கின்றேன். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாவட்டச் செயலகத்துக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தில் அரச தலைவரைச் சந்திக்க வைக்க முயற்சித்திருந்தோம். ஆனாலும் அது முடியாமல் போனது.

நான் அந்த இடத்தில் கதைத்துவிட்டு வரும் போது யாருடைய உந்துதலோ தெரியவில்லை என்னைத் தரக் குறைவான வார்த்தைகளால் அழைத்தார்கள். அப்படி அழைத்தவர்களைத் தெரியும். அதன் பின்னர் நான் அந்த இடத்திலிருந்து வெளியேறிவிட்டேன். காணாமல் ஆக்கப்பட்டோரின் சகல பிரச்சினைகளை யும் உதயன் பத்திரிகைதான் முதன்மைப் படுத்தியிருந்தது. இன்றும் முதன்மைப்படுத்துகிறது.

எங்களுக்கு உறவுகள் மீது கரிசனை இருக்கிறது. நான் முல்லைத்தீவு உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று சந்தித்திருக்கிறேன். அவர்கள் இதனை உணரவேண்டும். இதற்கு அப்பால் அவர்கள் சொல்லித்தான் நாம் கதைக்க வேண்டியதில்லை. நான் பார்க்கும்போதெல்லாம் எமது. மூத்த தலைவர்கள் அரச தலைவருடனோ, தலைமை அமைச்சரிடமோ பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். உறவுகளுக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது.

அரசியல் ரீதியாக அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளில் சிலரைப் பயன்படுத்த சிலர் முனைகின்றனர். அந்த உறவுகள் அதற்குப் பலியாக வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஒ.5,21)

### கூட்டுறவாளர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

ஏழாலை மேற்கு சிறி விநாயகர் ஐக்கிய நாணய சங்கம் நடத்தும் கூட்டுறவாளர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை சங்க மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.செல்வகிரீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

அங்கத்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டி, கூட்டுறவாளர்கள் மதிப்பளிப்பு,சிறந்த செயற்பாடுகளுக்கான பரிசில் வழங்கல்,சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

### வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

யாழ்ப்பாணம் சரவணை பள்ளம்புலம் சங்குதறை அருள்மிகு சிறி சிவஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம்நடைபெற்றுஎதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை 108 சங்காபிசேகமும் மறுநாள் 18 ஆம்திகதிபொங்கல் உற்சவம்நடைபெறும்என்று ஆலய உற்சவ ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

### மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இந்துமா மன்றத்தால் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு இன்று சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)




### நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

தெல்லிப்பழை மகாஜன கல்லூரி நூலக அபிவிருத்திக்கு ஒருதொகை நூல்கள் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

காயத்திரி பப்ளிகேஷன் அனுசரணையில் தமிழ் தாய் மன்றம் இந்த அன்பளிப்பை செய்துள்ளது.

தமிழ்த் தாய் மன்றத்தின் போஷகர் விஞ்ஞான எழுத்தாளர் செ. வேலாயுதபிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூல்களை வழங்கி வைத்தார். (ஐ)

### சிறைக்குக் ஹெரோய்ன் கொண்டுசென்றாரென குடும்பப் பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6

சிறைச்சாலையில் உள்ள கணவருக்கு ஹெரோய்ன் போதைப்பொருள் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் மனைவி சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உடுவில் மல்வம் பகுதியில் வைத்து அவர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீதியில் சென்ற அவரைப் பொலிஸார் சோதனையிட்டபோது அவரது கைப்பையிலிருந்து, 8 கிராமும், 400 மில்லிக்கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்திய போது, சிறைச்சாலையில் உள்ள கணவருக்கு .கொண்டு செல்வதற்காக, வேறு நபரிடம் வாங்கிச் செல்கின்றேன் என்றுமனைவிவிசாரணையின் போது கூறியுள்ளார். விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-106)

# படையினரின் இசைநிகழ்வை எதிர்த்து இன்று கவனவீர்ப்பு

வவுனியாவில் இராணுவத்தினரின் 56 ஆவது படைப்பிரிவின் அனுசரணையில் இன்று நடைபெறும் இசை நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா கந்தசாமி ஆலயத்தில் முற்பகல் 10.30 மணியளவில் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து தமது போராட்டக் களத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கச் செயலர் தெரிவித்தார்.

இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் மனதளவில் மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் குறித்த இசை நிகழ்ச்சி இடம்பெறுகிறது என்று இராணுவத்தின் 56ஆவது படைப்பிரிவு கூறுகிறது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று மாலை 7 மணியளவில் இது இடம்பெறவுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம். தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் இராணுவத்தின் 56ஆவது படைப்பிரிவு தொடர்புபட்டுள்ளது.

பன்னாட்டளவில் போர்குற்றம் புரிந்துள்ளதாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றுவரும்நிலையில் கழியாட்ட நிகழ்வுகளை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையாகவும் தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தியும் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார். (த)

# ஒரு வார காலத்தில் மன்னாரில் பல மின் பொருள்கள் நாசமாகின

## அடிக்கடி ஏற்பட்ட மின் தடையின் விளைவாக

மன்னார், ஜூலை 6

இலங்கை மின்சார சபையின் அசமந்தப் போக்கால் பல லட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்கள் செயலிழந்துள்ளன என்றுகூறி மன்னார் மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஒருவாரகாலமாக மன்னாரில்மின் இணைப்பு சீராக இல்லை விட்டுவிட்டு மின்சாரம்வருவதால்பெறுமதியான மின் உபகரணப் பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

"எங்கு பார்த்தாலும் மின்சார சபையினர் மின்கம்பத்தில் தொங்கியபடி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மன்னார் மாவட்டத்தில் மின் தடைப்படாத நாள் இல்லை. அதிலும் கடந்த வாரத்தில் இருந்து தொடர்ச்சியாக விட்டு விட்டு மின் வந்ததால் பெறுமதியான மின் உபகரணப் பொருள்களான குளிர்சாதனப் பெட்டிகள், கணினிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மின் குமிழ்கள் போன்றன செயலிழந்துவிட்டன" என்று தெரிவிக்கின்றனர்.

இது பற்றி மின்சார சபையின் வடக்கு மாகாண தலைமைப் பணியகத்திடம் கேட்டபோது, மன்னாரில் உப்புக் காற்றுக் காரணமாக மின் கம்பிகளில் தூசி படர்கிறது. அதனால் மின் விநியோகம் தம்பாட்டுக்கு திடீரென்று நின்று மீள இயங்குகின்றது. மின் வடங்களிலுள்ள தூசிகளை அகற்றி அவற்றைக் கழுவிச் சீர்செய்யும் பணிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-213)

# புதிதாக மாணவர்களை இணைப்பது தொடர்பில் சுற்றறிக்கை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

பாடசாலையில் புதிதாக மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் அதிபர் உட்பட மூன்று பேர் நேர்முக தேர்வுச் சபையில் இருக்க வேண்டும் என்று தெரிவித்து கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தரம் ஒன்றுக்கு மாணவர்களைப் பாடசாலைகள் உள்வாங்குவதில் சிக்கல் தன்மை சற்று குறைவாக காணப்படுகிறது. புதிதாக பாடசாலைக்கு இணைந்து கொள்ளும் மாணவர்கள் என்ற படியால் அனைத்து விடயமும் பொதுவான விண்ணப் படிவம் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்து கொள்ள படுகின்றனர். ஆனால் தரம் 2 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பது என்பது கடினமான விடயம்.

பாடசாலையில் குறித்த வகுப்பில் வெற்றிடம் இருந்தால் மட்டுமே மாணவர்களை இந்தப் பிரிவில் சேர்த்து கொள்ள முடியும். ஆகவே இதில் தேர்வுச் சபை உட்பட பல்வேறு விடயங்களில் குழப்ப நிலை காணப்படுகிறது. இதனைத் தவிர்த்து கொள்ளும் நோக்கில் தேர்வுச் சபை அமைக்கப் படல் வேண்டும்.

தரம் 7 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களை உள்வாங்கும் போது அமைக்கப்படும் தேர்வுச் சபையில் பாடசாலையின் அதிபர்,பிரதி அதிபர்,பிரிவுத் தலைவர் ஆகிய மூவர் கொண்ட சபை இருத்தல் கட்டாயாமானது.

அதே போன்று தரம் 2 தொடக்கம் 4 வரையிலான மாணவர்களை உள்வாங்கும் நோக்கில் அமைக்கப்படும் தேர்வுச் சபையில் பாடசாலை அதிபர் ,பிரதி அதிபர் அல்லது ஆரம்ப கல்வி பிரிவின் தலைவர்,ஆரம்ப கல்வி பிரிவின் மூத்த ஆசிரியர் உள்ளடக்கப்பட்டு மாணவர் உள்வாங்கும் நடவடிக்கை மேற்கொள்ள பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

பழைய மாணவர்கள், ஊர்ப் பெரியவர்கள் , தெரிந்த ஆசிரியர் பரிந்துரை என்று பல்வேறு தரப்பினரின் தெரிவில் மாணவர்கள் உள்வாங்குவது சில பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றது.

குறித்த சுற்றறிக்கை மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் தொடக்கம் பாடசாலை அதிபர் வரைக்கும் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-7)

## வீதியில் நின்ற சிறார்களை தாக்கிவிட்டுத் தப்பியோட்டம்

சாவகச்சேரி, ஜூலை 6

மதுபோதையில் சென்றவர் வீதியில் நின்ற இரு சிறுவர்களை மோசமாகத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தென்மராட்சி நுணாவில் மத்தியில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சிறுவர்களில் ஒருவரின் கழுத்தை நெரித்தும் மற்றைய சிறுவனைத் தாக்கி கையில் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக நுனாவில் திலகம் பள்ளவைச் சேர்ந்த ஜெ.தனோஜன் (வயது- 14)என்ற சிறுவன் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஜெ. ஜெதுசன்(வயது -13) சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். தாக்கப்பட்டவர் தப்பிச் சென்றுவிட்டார்.

எதற்காகத் தாக்கினார் என்ற விடயங்கள் தெரியவரவில்லை. விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-9)



யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி சென்.பிலிப் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கிவைத்தார். (ஐ)

## வணிகச் சந்தை

கொடிகாமம், ஜூலை 6

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் வணிக வாரத்தை முன்னிட்டு வணிகச் சந்தை நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது.

வணிக மாணவர் மன்றத் தலைவர் ஏ.நிலக்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் அயற் பாடசாலை ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். கடந்த திங்கட்கிழமை தொட்க்கம் நேற்று வெள்ளிக்கிழமை வரை வணிக வாரம் கொண்டாடப்படுகிறது. அதன் ஒரு அங்கமாக நேற்றைய தினம் வணிகச் சந்தை இடம்பெற்றது. (ஐ-159)

# வவுனியாவில் வறட்சி நீடிப்பு: 177 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

### இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 6

வவுனியாவில் வறட்சி நீடிப்பதால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி 177 ஏக்கர் சிறுபோக நெற் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறட்சி காரணமாக வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவில் 12 ஏக்கர் நெற் செய்கையும், நெளுக்குளம் கிராம அலுவலர் பிரிவில் 18 ஏக்கர் நெற்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவின் மாமடு கிராம அலுவலர் பிரிவில் 100 ஏக்கர் நெற் செய்கையும், கல்மடு பிரிவில் 15 ஏக்கரும், மகாகச்சகொடி கிராம அலுவலர் பிரிவில் 10 ஏக்கரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குருக்கள் புதுக்குளம் கிராம அலுவலர் பிரிவில் 22 ஏக்கருமாக 177 ஏக்கர் சிறுபோக நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, வவுனியா வடக்கு, மருதோடை கிராம அலுவலர் பிரிவில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பிரதேச செயலகம் ஊடாகக் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குளத்துத் தண்ணீர் வற்றிய நிலையில் கால்நடைகளும் அவதிக்குள்ளாகின்றன என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். (த)



## ஜேர்மன் நாட்டுத் தூதுவரை சந்தித்த வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் ரொட்டுக்கும் வடக்கு மாகாணஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

29 வருடங்களுக்கு பின்னர் தமது இடத்தினை பார்வையிட காங்கேசன்துறை ,கீரிமலை மக்கள் நேற்றுமுன்தினம் பயணம் செய்ததனை நினைவுகூர்ந்த ஆளுநர்,அரச தலைவர் தலைமையில் பொதுமக்களுடைய காணிகளை அவர்களிடமே விடுவிக்கும் செயற்பாடுகளை ஏப்ரல் 21ஆம் திகதிக்கு பின்னர் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் அதற்காக முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் தொடர்பில் தெரிவித்த ஆளுநர், ஜேர்மன் அரசால் வடக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவமுடியுமான வழிகளில் உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

இதேவேளை வடக்கு மாகாணம் எதிர்காலத்தில் முகம் கொடுக்கவுள்ள தண்ணீர்ப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஐந்து திட்டங்கள் குறித்து விளக்கமளித்த ஆளுநர் அதன் முதற்திட்டமான வடமராட்சிக் களப்பு திட்டம் குறித்தும் தெளிவுபடுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

புலோலி தென்மேற்கு வாணர்குடியிருப்பு சொக்கன்கலட்டி சிறி முத்துமாரி அம்மன் கோவில் குடமுழுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

கோவில் முதன்மைக்குரு சிவசிறி மண்டலேஸ்வர குருக்களின் உதவியுடன் சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் தலைமைக்குரு முத்தமிழ் குருமணிபிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமைக் குருவாக இருந்து குடமுழுக்கை நடத்திவைத்தார். (ஐ-173)

## போதைக்கு அடிமையானவர்கள் வெறுத்து ஒதுக்கப்படுகின்றனர்

### நல்லொழுக்க சம்மேளனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

போதை ஒழிப்பு விழிப்புணர்வுகள் தொடர்கின்றனவெனினும், குடிபோதைக்கு அல்லது கஞ்சா, ஐஸ் போன்ற போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் சமுதாயத்தால் ஒதுக்கப்படுகின்றார்கள் என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன நிறை வேற்றுச் செயலர் எஸ்.குமாரசிங்கம் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் ச.பாலச்சந்திரன் தலைமையில் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு காலவரையறையைப் பிரகடனப்படுத்தல் எனும் தலைப்பில் கருத்தமர்வு கடந்த 28ஆம் திகதி அங்கு நடைபெற்றது.

அதில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

போதைக்கு அடிமையாகி வறுமையில் சிக்கித் தவிக்கும் நிலை முழுமையாக மாற வேண்டும்.

இன்றைய எமது கருத்துரையின் தொனிப்பொருள் எதிர் கால சந்ததியினருக்கு விடுக்கும் அன்பான வேண்டுகோள் யாதெனில், பேரம்பேசி தமிழ் இளைஞர்களைப் பலவீனப்படுத்தும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக குரல் கொடுக்க சகலரும் ஒன்று திரள வேண்டும் என்பதே.

நாளொன்றுக்கு 60 பேரைக் கொல்லும் சிகரெட் உற்பத்தி கம்பனிகளின் அடுத்தஇலக்கு உங்கள் குழந்தைகளே என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். இப்போதே உங்கள் பிள்ளைகளை வழிப்படுத்திப் பாதுகாத்திடுங்கள்.

குடிபோதைக்கு அடிமையானவர்களுடன் தங்கள் பிள்ளைகள் பழகுகின்றனரெனின் அதனை நிறுத்தி விடுங்கள். இல்லையேல் உங்கள் பிள்ளைகளும் போதைக்கு அடிமையாகி விடுவார்கள்.

குடிபோதைக்கு அடிமையாகி குடிப்பதற்கு செலவு செய்து கொண்டு வீட்டு வறுமையைக் காரணம் காட்டி மற்றவர்களிடம் கையேந்தும் நிலையை எமது கண்முன்னால் காணமுடிகின்றது. இதுமட்டுமன்றி, மதுபோதைப் பாவனையிலுள்ள குடும்பங்களில் மகிழ்ச்சி இருப்பதில்லை.

மதுபோதைப் பாவனையாளர்கள் தமது வீரத்தை பலவீனமான பெண்களிடமே காட்டுகின்றனர். எனவே இந்தப்பழக்கத்துக்கு உள்ளானவர்கள் அனைவரும் மீண்டெழுந்து நல்லதொரு சமுதாயத்தையும், வீட்டையும், நாட்டையும் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் - என்றார். நிகழ்வில், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான இலட்சினைகள் மற்றும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. (த-50)

## பாடசாலை மைதானத்தில் தீ பரவல்

வவுனியா, ஜூலை 6

வவுனியா ஈரப்பெரிகுளம் அலகல்ல வித்தியாலயத்தில் ஏற்பட்ட தீ பரவலால் பாடசாலை மைதா னம் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்றது.

பாடசாலைக்கு அருகே காணப்பட்ட வெற்றுக் காணிக்கு வைக்கப்பட்ட தீ காற்றினால் பரவி அருகிலுள்ள பாடசாலை மைதானத்துக்குள் பரவியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபரால் வவுனியா நகரசபை தீ அணைக்கும் பிரிவினருக்கு வழக்கப்பட்ட தகவலை அடுத்து தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்த விபத்தால் பாடசாலை மாணவர்கள் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)





# திருக்கேதீச்சர வளைவு அமைப்பதை மன்னார் ஆயரே இடைநிறுத்தினார்

## உண்மையைப் போட்டுடைத்தார் தவிசாளர்

மன்னார், ஜூலை 6

மன்னார் திருக்கேதீச்சர ஆலய வளைவு அமைப்பதற்கு பிரதேச சபையால் வழங்கப்பட்ட அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் என்னிடம் கேட்டுக் கொண்டார். மன்னார் ஆயர் இல்லத்துக்கு என்னை அழைத்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். அதன் பின்னரே, வழங்கிய அனுமதியை இடைநிறுத்தினேன். இவ்வாறு மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் தெரிவித்தார்.

மன்னார் திருக்கேதீச்சர ஆலய வளைவு தொடர்பில், மன்னார் பிரதேச சபையின் அவசரக் கூட்டம் தவிசாளர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. 21 உறுப்பினர்களில் இருவரைத் தவிர ஏனையோர் அவசரக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை ஆரம்பித்து உரையாற்றிய தவிசாளர், எமது சபை உறுப்பினர் ஜஸ்ரின் இயூற் கொன்சன் குலாஸ் 13 உறுப்பினர்களின் கையெழுத்துடன் என்னிடம் கடிதமொன்றை சமர்ப்பித்தார். மன்னார் திருக்கேதீச்சர ஆலய வளைவு சம்பந்தமாக அவசர கூட்டத்தைக் கூட்டுமாறு கோரியிருந்தார். அதற்கு அமைவாக இந்தக் கூட்டம் கூட்டப்படுகின்றது.

திருக்கேதீச்சரம் வளைவுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் பின்னர் அது இடைநிறுத்தப்பட்டது தொடர்பாகவும் சபை உறுப்பினர்களுக்கு விளக்கம் கொடுக்கவுள்ளேன்.

திருக்கேதீச்சர வளைவு தொடர்பாக வழங்கப்பட்ட தகவலின்படி 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி திருக்கேதீச்சர வளைவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

சமயம் சார்ந்த அந்தப் பகுதியில் மனித புதைகுழி இனம் காணப்பட்டதால் வளைவை அமைப்பதற்கு பாதுகாப்பு படையினர் அனுமதிக்கவில்லை. அனுமதி வழங்கப்பட்டு ஓராண்டு செயற்படுத்தப் படாவிட்டால், மீண்டும் அனுமதி கோரவேண் டும். அதற்கு அமைவாக மீண்டும் அனுமதிக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொண்டனர். நல்லிணக்கத்தைப் பேணுமுகமாக நான் சபையின் கவனத்துக்கு இதைக் கொண்டு வந்திருந்தேன். இது விடயமாக சபையின் இரு கூட்டங்களில் விவாதிக்கப்பட்டன.

இடத்தைப் பார்வையிட்டு முடிவு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி சபை உறுப்பினர்கள் சிலருடன் இடத்தைப் பார்வையிட்டோம்.

முதன்மை வீதியிலிருந்து 50 அடி வீதி. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. அதிலிருந்து திருக்கேதீச்சர ஆலயம் வரையுள்ள வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. அங்கு எந்த இடத்திலும் வளைவு அமைக்கத் தடை இல்லை என்று தெரிவித்திருந்தனர்.

சிநேகபூர்வமான ஒரு கூட்டத்தில், ஏனையோர் அனுமதி வழங்கியுள்ள நிலையில் வளைவுக்கு நீங்கள் ஏன் இன்னமும் அனுமதி வழங்கவில்லை என்று உப தவிசாளர் என் னிடம் கேட்டார்.

அங்கிருந்த 13 உறுப்பினர்களும், என்னிடம் இந்த விடயத்தைப் பொறுப்பளித்தனர். பிரச்சினைகள் தலைதூக்கினால் இரு பகுதியினரும் நீதிமன்றை நாடட்டும் என்று கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து வளைவு அமைப்பதற்கான அனுமதியை வழங்கினேன். அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மன்னார் ஆயர் இல்லத்தின் சார்பாக சிலர் என்னை வந்து சந்தித்தனர். ஆயர் இல்லத்துக்கு என்னையும் எமது சில உறுப்பினர்களையும் அழைத்திருந்தனர்.

எமது சகோதரத்துவத்துக்குள் பிரச்சினை ஏற்படாது பாதுகாக்க வேண்டும். நாங்கள் இரு பகுதியினரும் பேசித் தீர்க்கும் வரையில் வழங்கப்பட்ட அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மன்னார் ஆயர் என்னிடம் கேட்டுக் கொண்டார். எமது உறுப்பினர்கள் சிலருடன் நான் உரையாடி, இந்த விடயத்தைச் சுமூகமாகத் தீர்ப்பதற்கு மன்னார் ஆயர் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகத் தெரிவிப்பதால் தற்காலிகமாக இடைநிறுத்துவோம் என்று கூறி னார்கள். அதற்கு அமைவாக இடைநிறுத்தினேன்.

எமது உறுப்பினர் கொன்சன் குலாஸ் இது விடயமாக அவசரக் கூட்டத்துக்கான கடிதத்தை என்னிடம் கையளித்திருந்தார்.

இது சம்பந்தமாக மன்னார் ஆயரிடம் கலந்துரையாடியபோது, ஒரு அவசரக் கூட்டத்துக்கு அவசியம் இல்லை என்று அவர் தெரிவித்திருந்தபோதிலும் 12 உறுப்பினர்கள் கையொப்பங்கள் வைத்திருந்தமையால் இவ் அவசரக் கூட்டத்தை கூட்டியுள்ளோம்.

ஆகவே நாம் மதம் கட்சி என்ற நிலையிலிருந்து விடுபட்டு அமைதிக்கும் நீதிக்கும் சமாதானத்துக்கும் அத்துடன் சட்டத்தையும் நோக்கி செயற்படும்படி வேண்டி நிற்கின்றேன்- என்றார். (ஒ.5.60)

# கேதீச்சர வளைவு தொடர்பில் மௌனியாக இருந்து விட்டு இப்போது கொக்கரிப்பது ஏன்?

## பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமநாதன் கேள்வி

மன்னார், ஜூலை 6

மன்னார் பிரதேச சபை உறுப்பினர்களில் 13 பேர் கிறிஸ்தவர்களாக இருந்தும், திருக்கேதீச்சர வளைவு சம்பந்தமான பிரச்சினை எழுப்பப்பட்டபோது மௌனியாக இருந்துவிட்டு இப்பொழுது ஏன் ஆளுக்கொரு மடலுடன் வருகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மன்னார் பிரதேச சபை உறுப்பினர் பாலசிங்கம் கதிர்காமநாதன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கேதீச்சர ஆலய வளைவு சம்பந்தமாக நான் இங்கு உரையாடும்போது அனைவரும் பெட்டிப் பாம்புபோல் இருந்தனர். இப்பொழுது இங்கு எல்லோரும் வளைவு அமைக்க வேண்டும் அதுவும் ஆலய எல்லைக்குள்தான் அமைக்க வேண்டும் என்கின்றார்கள்.

இந்த வளைவு முன்பு அமைக்கப்பட்ட இடத்திலேயே அமைக்கப்பட வேண்டும் என்று இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்து நிற்கின்றனர். கடந்த மூன்று மாதங்களாக பிரதேச சபை உறுப்பினர்கள் இது விடயமாக எதுவும் பேசாத நிலையில் இப்பொழுது பிரதேச சபையில் ஒரு மாயை ஏற்படுத்தி வருகின்றனர்.

2016 ஆம் ஆண்டு வளைவுக்கு அனுமதி வழங்கியபோது இப்பொழுது பிரச்சினைப்படுவோர் எல்லோரும் இங்கு தானே இருந்தார்கள். அப்பொழுது இவர்கள் ஏன் இதை தடை செய்யவில்லை?

இரு பகுதியினருக்கிடையில் ஒரு ஒப்பந்தம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாந்தை மாதா ஆலயத்தை மறுசீரமைப்பது என்றால், அந்த இடத்தில் வளைவு அமைக்க அனுமதிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் ஆலயம் எந்த அனுமதியுமின்றி கட்டப்பட்டுள்ளது.

ஆலய கட்டடப் பணிகள் முடிவுற்றதும் இப்பொழுது இவ் வளைவு அமைக்க தடை விதிக்கின்றனர்.

திருக்கேதீச்சர ஆலய வளைவு அமைக்கப்பட வேண்டிய இடத்தை நீங்கள் தெரிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சகல திணைக்களங்களும் இந்த வளைவை அமைப்பதற்கான இடத்தை வழங்கிவிட்டார்கள். சபை தற்பொழுது இந்தக் கட்டுமான பணிக்கு இடைக்கால தடை உத்தரவை வழங்கியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும். கடந்த இரண்டாம் திகதி ஆயர், இந்து குருமார் அவ்விடத்துக்குச் சென்றிருந்தனர். அங்கு ஆயர் தெரிவித்த விடயம் வேறு. இங்கு உறுப்பினர்கள் தெரிவிக்கும் விடயம் வேறு. வளைவு அமைக்கப்பட்டால் மாதா கோவில் மறைக்கப்படும் என தெரிவித்துள்ளனர். ஆனால் மன்னார் ஆயர், இங்கு வளைவு அமைக்கப்பட்டால் இரு சமூகங்களுக்கிடையே முறுகல் நிலை தோன்றும் என்றே தெரிவித்திருந்தார்.

பிரச்சினை தோன்றும் என்றால் அதற்குச் சட்டம் இருக்கிறது பொலிஸார் இருக்கின்றனர். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். மதத்தோடு சம்பந்தப்பட்டவர்கள்தான் அரசியல்வாதிகள்.

இங்கு திணைக்களங்களுக்கு மற்றும் நியமனங்களுக்கெல்லாம் மதத்தோடு சம்பந்தப்பட்டவர்கள்தான் ஈடுபடுகின்றனர். இந்தச் சபையில் 21 உறுப்பினர்களில் 13 உறுப்பினர்கள் கிறிஸ்தவர்கள். இவ்வாறு நீங்கள் இருந்தும் ஆரம்பத்தில் இந்தப் பிரச்சினை தலைதூக்கியபோது நீங்கள் ஏன் மௌனியாக இருந்தீர்கள் என்று நான் உங்களிடம் கேட்கின்றேன் -.என்றார். (ஒ.5.60)

# மாந்தை மாதா ஆலயத்துக்கு அருகில் வளைவுக்கு அனுமதி வழங்கக் கூடாது

## மன்னார் பிரதேச சபை கிறிஸ்தவ உறுப்பினர்கள் விடாப்பிடி

மன்னார், ஜூலை 6

மன்னார் மாந்தைச் சந்தியில் அமைந்துள்ள மாதா ஆலயத்துக்கு அருகில் திருக்கேதீச்சர ஆலயத்தின் வளைவு அமைப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று மன்னார் பிரதேச சபையின் கிறிஸ்தவ உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபையின், அவசரக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதேச சபையில் நடைபெற்றது.

அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு உறுப்பினர்களின் கையொப்பங்களைத் திரட்டிய, பிரதேச சபை உறுப்பினர் கொன்சன் குலாஸ், திருக்கேதீச்சர ஆலயம் மாந்தை சந்தியிலிருந்து ஆயிரம் மீற்றருக்கு அப்பால் உள்ளது. மாந்தை மாதா ஆலயம் மாந்தை சந்தியில் அமைந்துள்ளது.

திருக்கேதீச்சரத்துக்கு தெற்கிலிருந்து வருகை தரும் பக்தர்கள் ஏ 14 முதன்மைப் பாதையிலிருந்து முனியப்பர் வீதி வழியூடாக ஆலயம் செல்லுகின்றனர். அதே போல் வடக்கிலிருந்து வரும் பக்தர்கள் சிவபுரம் என்ற வழியாக ஆலயம் வரும் நிலை இருக்கின்றது.

ஆகவே மாந்தைச் சந்திக்கு அருகாமையில் மாந்தை மாதா ஆலயத்தை அண்மித்து வளைவு அமைப்பது மாதா ஆலயத்துக்கு வருபவர்களுக்கு இடையூறாக அமையும். மாந்தைச் சந்தியிலிருந்து 150 மீற்றருக்கு அப்பால் வளைவு அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்றார்.

மற்றொரு உறுப்பினரான செபமாலை பீரிஸ் தெரிவித்ததாவது, மன்னார் மாவட்டத்தில் பிரச்சினைகள் உள்ளூரைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழும் மக்கள் மத்தியிலிருந்து உருவாகுவதில்லை.

மாறாக பிற மாவட்டங்களிலிருந்து மன்னார் மாவட்டத்துக்கு வந்து குடியேறியுள்ளவர்களாலேயே பிரச்சினைகள் தோன்றி வருகின்றன. பிற மாவட்டங்களிலிருந்து இங்கு வந்தவர்கள் தற்பொழுது எம் மத்தியில் நச்சு விதைகளை விதைத்து வருகின்றனர்.

இந்த விடயத்தில் நாம் எல்லோரும் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

வளைவு அமைப்பது ஒரு முக்கியமான விடயம் அல்ல. இந்த வளைவு அவசியம் அமைக்க வேண்டும் என்பதும் அல்ல. அல்லது கட்டக்கூடாது என்பதும் அல்ல. இந்த வளைவு கட்டினால்தான் அல்லது கட்டாவிட்டால் ஒருவரின் பக்தி இல்லாமல் போய்விடாது அல்லது பக்தர்கள் ஆலயம் வரா மல் விடப்போவதுமில்லை.

ஆனால் ஒரு சமயத் தலம் இருக்கும் இடத்தில் இன்னொரு சமயத் தலம் அமையும்போது அந்த சமயங்களுக்கு மத்தியில் மனதுக்குள் புழுங்கி பிரச்சினைகள் தலைதூக்குவது இயல்பே. இவ்வாறான பிரச்சினைகள் தலைதூக்காதிருக்க விட்டுக் கொடுப்புடனும், மனிதாபிமானத்துடனும் செயல்படுவதே சிறந்தது. திருக்கேதீச்சர ஆலயத்தினர் அந்தப் பகுதியில் வளைவு அமைப்பதை நான் முற்று முழுதாக எதிர்க்கவில்லை.

ஆனால் அந்த இடத்தில் ஒரு சமயத் தலம் இருப்பதால் அந்த இடத்தை விட்டு சற்றுத் தூரத்தில் அமைக்கும் பட்சத்தில் இரு சமயங்களுக்குமிடையே நல்லுறவு ஏற்பட வாய்ப்பு அமையும். இரு மதங்களுக்கு இடையே பிரச்சினைகள் தலைதூக்கக் கூடாது என்பதற்காக வழங்கிய அனுமதியை மீளப் பெற்றமைக்கும் தவிசாளருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்- என்றார். (ஒ.5.60)

*108 பானைகளில் பொங்கல் விழாவையொட்டி*

# நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு இன்று சென்றுவர பேருந்து ஒழுங்கு

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் இன்று நடைபெறும் பொங்கலுக்குச் சென்றுவர பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பௌத்த தேரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் முல்லைத்தீவு பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய இருப்பையும், தமிழர்களின் நிலவுரிமையையும் உறுதிப்படுத்தி ஆலயத்துக்கான தமிழ் மக்களின் ஆதரவுப் பலத்தை ஆக்கிரமிப்பாளர்களுக்கு காண்பிக்கும் முகமாக "தமிழர் திருவிழா" எனும் தொனிப்பொருளில் 108 பானைகளில் பொங்கல் விழா இன்று இடம்பெறவுள்ளது. இதற்குப் பக்தர்கள் சென்றுவருவதற்கு ஏதுவாகவே பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்தும் மக்கள் அங்கு சென்று திரும்பி வருவதற்காகப் போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தான பேருந்துகளில் ஒன்று தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய முன்றலிலிருந்து காலை 6.30 மணிக்கு காங்கேசன் துறை வீதியூடாக யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து சாவகச்சேரி, கொடிகாமம் பேருந்து நிலையங்களில் நின்று முல்லைத்தீவுக்குச் செல்லும்.

மற்றுமொரு பேருந்து யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்திலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்று அங்கிருந்து பருத்தித்துறை வீதியூடாக நெல்லியடி, கொடிகாமம் சென்று புதுக்காடு சந்தி வழியாக முல்லைத்தீவுக்குச் செல்கிறது. (தொடர்பு இலக்கம்: ராஜசிறி 0772124654 மற்றும் மகிந்தன் 0777110955.)

திருகோணமலை சிவன்கோவிலடியில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் பேருந்து நிலாவெளி, திரியாய் ஊடாக முல்லைத்தீவுக்குச் செல்லும். (தொடர்பு: விவேகானந்தன் 0773770215)

வவுனியா பழைய பேருந்து நிலையத்திலிருந்து ஒரு பேருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு முல்லைத்தீவுக்குச் செல்கின்றது. (தொடர்பு: பிரணவன் 0776084108)

மன்னார் வண்ணாங்குளம் பகுதியில் இருந்து காலை 6 மணிக்கு ஒரு பேருந்து புறப்பட்டு திருக்கேதீச்சரம் சந்தி, ஏ 32 வீதியூடாகச் சென்று மாங்குளம் ஊடாக முல்லைத்தீவைச் சென்றடையும் (தொடர்பு:தீபன் 0770771236) என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் பேருந்து பரந்தன், விசுவமடு, தேவிபுரம் ஊடாக புதுக்குடியிருப்பு சென்று முல்லைத்தீவுக்குப் பயணிக்கும். (தொடர்பு: துஷாந்த் 0772479023) என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## விநாயகபுரம் நெற்செய்கைக்கு தண்ணீர் வழங்க 2.5 மில்லியன்

*நிதி அனுமதி கிடைத்தது என்று கூட்டமைப்பின் சாந்தி எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 6

வவுனிக் குளத்தின் கீழ் விநாயகபுரம் பகுதியில் சிறுபோக நெற் செய்கை மேற்கொண்டவர்களுக்கான தண்ணீர் வரத்து போதுமானதாக இல்லாத காரணத்தால் பாலியாற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்ச, 2.5 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டத்துக்கு அனுமதி கிடைத்துள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விநாயகபுரம் பகுதியில் சுமார் 100 ஏக்கர் செய்கைக்கும் தண்ணீர் வரத்து மந்த கதியில் காணப்படுகிறது. அதனால் விளைச்சல் பாதிப்படையும் என்றே கருதுகின்றோம். எனவே இந்தப் பயிர்களுக்கான தண்ணீரை அருகிலுள்ள பாலியாற்றிலிருந்து பாய்ச்சும் வகையில் அதற்கான குழாய் அமைப்பு உள்ளிட்ட செலவுக்குரிய பணத்தைப் பெற்றுத் தருமாறே கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

விவசாயிகளின் குறித்த கோரிக்கை மீள் குடியேற்ற மறுவாழ்வு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. சாதகமான பதில் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2.5 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்ட நிலையில் அதற்கான நிதி அனுமதி மீள் குடியேற்ற அமைச்சிலிருந்து எழுத்து மூலமாகக் கிடைத்துள்ளது. அதனால் வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன் மூலமாக இந்தமுறை மட்டுமன்றி எதிர்காலத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் நிவர்த்தி செய்யும் வாய்ப்புக் கிட்டியுள்ளது- என்றார். (த-105)

## வலி.தென்மேற்கு சபைக்கு நால்வர் நியமிக்கப்பட்டனர்

வலி.தென்மேற்கு, ஜூலை 6

வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் வருமானப் பரிசோதகர்களுக்கு உதவியாக நிரந்தரமாகப் பணியாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத அனுபவமுள்ள நான்கு தொழிலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இது பற்றிய தீர்மானத்தைச் சபை நிறைவேற்றியுள்ளது.

வருமானப் பரிசோதகருக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும் பொதுமக்களுக்கு விரைவாகச்சேவை செய்யும் நோக்குடனும் இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு வருமானப் பரிசோதகர்களாக அனுமதிக்கப்பட்ட ஆளணி ஐந்தாக இருந்தபோதும் இரண்டு வருமானப் பரிசோதகர்கள் மட்டுமே பல வருடங்களாகக் கடமையாற்றி வருகிறார்கள். இதனால் பரிசோதகர்களுக்கு வேலைப்பளு அதிகரித்துள்ளதால் பொது மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் கடமை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு, மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பரந்துபட்ட பிரதேசத்தை உள்ளடக்கியது. பிரதேசத்தில் ஆதனப் பெயர் மாற்றம், கட்டட விண்ணப்பங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து உடனுக்குடன் வழங்குவதில் ஏற்பட்டு வரும் தடங்கலைத் தவிர்ப்பதற்கும் வருமான அறவீடுகளை மேற்பார்வை செய்து வருமான அறவீட்டை விரைவுபடுத்துவதற்கும் ஏதுவாக வருமானப் பரிசோதர்களுக்கு உதவியாக ஏற்கனவே நிரந்தரமாகப் பணியாற்றும் அட்டவணைப்படுத்தப்படாதவேலை வெளிக்களத் தொழிலாளர்களில் அனுபவம் வாய்ந்த நான்கு பேரை நியமிப்பது என்றும் அவர்களுக்குப் பதிலாக புதிதாக நான்கு வெளிக்கள வேலைத் தொழிலாளர்களையும் இரண்டு சாரதிகளையும் வெளிவாரி அடிப்படையில் நியமிப்பதென்றும் அவர்களுக்கான கொடுப்பனவை சபை நிதியிலிருந்து வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-115)

## வருடாந்த திருவிழா

வடமராட்சி, ஜூலை 6

புலோலி புற்றளை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

வேட்டைத்திருவிழா 13 ஆம் திகதி சனிக்கிழமையும், சப்பறத்திருவிழா 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தேர்த்திருவிழா 15ஆம் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தத்திருவிழா 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

ஆலய முதன்மை குருவாக சிவசிறி சோ.ஜெயபாலசுந்தரக்குருக்கள் பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார். (ஐ-173)

## காலணிகள் கையளிப்பு

வவுனியா, ஜூலை 6

வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலய வீராங்கனைகளுக்கு 11 உதைபந்தாட்ட காலணிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

வவுனியா பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலகத்தின் அனுசரணையுடன் வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கு.செந்தில்குமரனால் காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் முதலாவது தேசிய மாநாடு இன்று

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், தனது முதலாவது தேசிய மாநாட்டை இன்று சனிக்கிழமை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணிவரை இது நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் தமிழ்மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமும் வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் மாத்திரம் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவர் கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சிறப்புரையாற்றவுள்ளனர் என்று ஐங்கரநேசன் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மாகாணத்துக்கு விடுவித்த 133 மில்லியனில் சிறிய வேலைத் திட்டங்களையே செய்யுங்கள்

*சபைகளின் உறுப்பினர்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடக்கு மாகாணத்துக்குக் கடந்த மாதம் விடுவிக்கப்பட்ட முத்திரை வரி நிதியான 133 மில்லியன் ரூபாவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட சிறிய வேலைத் திட்டங்களை மேற்கொள்வது நன்மை தரும் என்று சபைகளின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி உறுப்பினர்கள் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்ளூராட்சி சபைகளுக்குக் கிடைக்க வேண்டிய முத்திரை வரிகள் கொழும்பு திறைசேரிக்கு சென்றடையும். அவை உள்ளூராட்சி மன்றங்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதில்லை. இந்த முத்திரை வரி நிதி தற்போது சுமார் 133 மில்லியன் ரூபா மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக வடக்கு மாகாணத்துக்குக் கடந்த மாதம் விடுவிக்கப்பட்டுள்ளது.

அதில் சபைகளுக்குக் கிடைக்க வேண்டிய நிதியின் அளவுக்கு ஏற்ப திட்ட முன்மொழிவுகளைத் தருமாறு உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்திருந்தது. அதற்கான முன் மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுக்கொண்டுருக்கும் நிலையில், பெரிய திட்டங்களை இந்த நிதியில் முன் மொழிவதை விடுத்து சிறிய திட்டங்களை முன் வைத்தால் அது பயன் தரும்.

பெரிய திட்டங்களுக்கு அதிக நிதி வேண்டும். ஆகவே ஒரு மில்லியன், இரண்டு மில்லியனில் வேலைகள் இருந்தால் அதனை முன் மொழிவது சிறப்பாக அமையும்.

கையில் கிடைத்த நிதியைக் கொண்டு இந்தத் திட்டங்களை முன் மொழிந்து வட்டார ரீதியாகக் காணப்படும் சிறிய வீதிகளைச் சீரமைத்தல், கான்களைச் சீரமைத்தல் போன்ற வேலைகளைச் செய்து முடிக்க முடியும். இது மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவித்தனர். (7)

### தெல்லிப்பளையில் புற்றுநோயாளருக்கு

# சிகிச்சை வழங்கும் தொகுதி செயலிழப்பால் நோயாளர் அவதி

### விரைவில் சீர்செய்யப்படும் என்கிறது நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் புற்று நோய்க்கு சிகிச்சை வழங்கும் பிரிவின் கண்காணிப்புப் பிரிவில் ஏற்பட்ட பழுது காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

புற்று நோயாளர்களுக்கு மகரகம புற்று நோய் மருத்துவ மனைக்கு அடுத்த நிலையில் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆதார மருத்துவ மனையில் சிறப்பாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான கரண் பிடித்தல் என்று பேச்சு வழக்கில் சொல்லப்படும் 'லீனியர் அக்ஸ்லேட்டர்' தொகுதி சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

இலங்கையில் மகரகம மற்றும் தெல்லிப்பளை மருத்துவ மனை ஆகிய இரண்டு மருத்துவ மனைகளில் மாத்திரமே இந்தச் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. சுமார் 350 மில்லியன் செலவில் இந்தச் சிகிச் சைக்கான இயந்திரம் தெல்லிப்பளை மருத்துவ மனையில் பொருத்தப்பட்டு மார்ச் மாதமளவில் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. பணம் விரயம் மற்றும் உடல் அலைச்சல் ஆகியவற்றை கொண்டு மகரகமவில் சிகிச்சை பெறுவதற்கு சிரமப்படுபவர்களுக்கு இங்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

நாளொன்றுக்கு சுமார் 45 நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது. வெளி மாவட்டத்தில் இருந்தும்கூட நோயாளர்கள் சிகிச்சைக்காக இங்கு வந்து செல்வார்கள். ஆரம்ப காலத்தில் இந்தச் சிச்சைக்காக பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் மற்றும் சேவையை விட தற்போது காணப்படும் சிகிச்சை முறை மிகவும் பயன் உடையதும் பக்க விளைவுகள் குறைந்தனவாகவும் காணப்பட்டது.

இந்த நிலையில், சில தினங்களாக சிகிச்சை பிரிவின் கண்காணிப்புப் பிரிவில் ஏற்பட்ட பழுது காரணமாக அங்கு சிகிச்சை பெற முடியவில்லை. நோயாளர்கள் காத்திருந்து விட்டு செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் தெல்லிப்பளை மருத்துவ மனையின் புற்று நோய் சிகிச்சை பிரிவு நிர்வாகத்திடம் கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது:

சிகிச்சைப் பிரிவு கதிர்த்தாக்கங்கள் நிறைந்த பகுதியாக அது காணப்படும்.

ஆகவே சிகிச்சைமுறைகள் முதன்மைக் கமெரா மூலமாகக் கண்காணிக்கப்பட்டு அதனூடாகக் கணனிக்குத் தரவுகள் பெறப்பட்டு சிச்சை வழங்கப்பட்டு வருகிறது. கண்காணிப்புப் பிரிவில் ஏற்பட்ட பழுது காரணமாக தொடர்ச்சியாக சிகிச்சை வழங்க முடியவில்லை.

ஆனால் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் பழுதடைந்த பகுதியை மாற்றுவதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

வேலைகள் நிறைவடைந்தவுடன் நோயாளர்களுக்கும் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)



## மீன்பிடி வலைகள் கையளிப்பு

முல்லைத்தீவு,ஜூலை 6

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புர மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் நேற்று முன்தினம் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் சென்ற வருட சிறப்பு நிதி ஒதுக்கீட்டில் இருந்து இந்த வலைகள் வழங்கப்பட் டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் செல்வி. நிரஞ்சனா, பிரதேச சபை உறுப்பினர்களான சீலன் மற்றும் சிந்துஜன், மாந்தை கிழக்கு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், மீனவசமூகப் பிரதிநிதிகள், பயனாளிகள் எனப் பல்ரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



## மரநடுகையும் மரக்கன்றுகள் வழங்கலும்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

மறைந்த மருத்துவர் செ.து. சண்முகராஜாவின் நினைவு நாளை முன்னிட்டு மரநடுகையும், மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தால் , அக்கிராமத்தில் சேவையாற்றி மறைந்த மருத்துவரின் நினைவாக "பசுமை, புரட்சி" செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி இளவாலை கிராமத்தினையும், அயற்கிராமங்களையும் சேர்ந்த பாடசாலைகள், பொது இடங்கள், மருத்துவமனைகள் ஆகிய இடங்களில், மரம்நடுகை செய்தும், மரக்கன்றுகள் வழங்கவும் தீர்மானித்துள்ளனர்.

செயற்திட்டத்தின் தொடர்சியாக இன்று அக்கிராமத்தை சேர்ந்த 6 கிராம அலுவலகர் பிரிவுகளிலும் , தெரிவு செய்யபட்ட பயனாளிகளுக்கு பயன் தருமரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(ஐ-222)

### தென்மராட்சியில்

## இரண்டாம் கட்டக் கொடுப்பனவு கிடைக்காதோருக்கு நிதி வந்தது

### வங்கியில் உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, ஜூலை 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடரால் பாதிக்கப்பட்டவர்களில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு கிடைக்காத 268 பேருக்கும் உரிய கொடுப்பனவுத் தொகை அவர்களின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்று தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அறிவித்துள்ளது என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். கடந்த வருட இறுதியில் வீசிய கஜா புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு ஆகியவற்றால் 588 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 320 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் பிரதேச செயலகத்துக்கு நிதியத்தால் அனுப்பி வைக்கப்பட்டன. அவை கிராம அலுவலர்கள் ஊடாக உரிய பயனாளிகளுக்கு சில நாள்களாக விநியோகிக்கப்பட்டன.

இந்த நிலையில் தமக்குக் கொடுப்பனவு வழங்கவில்லையென்று இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கான பட்டியலில் பெயர் வராதவர்கள் சில நாள்களாகப் பிரதேச செயலகத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பியிருந்தனர்.

இந்த நிலையில், மிகுதிப் பேருக்கும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினரால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே காசோலை பெயர்ப் பட்டியலில் பெயர் வராதவர்கள் தமது வங்கியில் விசாரித்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-9)





## கல்விக் கண்காட்சியும் மதிப்பளிப்பும்

முல்லைத்தீவு,ஜூலை 6

முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலையில் கல்விக் கண்காட்சி, ஆசிரியர் மாணவர்கள் மதிப்பளிப்பு மற்றும் சஞ்சிகை வெளியீடு ஆகிய நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் கு.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக துணுக்காய் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச.சஞ்சீவன், சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.பங்கயற்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## கருங்குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 6

கருங்குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவ மனையில்சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அல்லாரையைச் சேர்ந்த தியாகராசா தியாகு (வயது -63) என்ற முதியவரே குளவிகளால் தாக்கப்பட்டார்.

சாவகச்சேரி கல்வயலில் உள்ள வைரவர் கோவிலில், நேற்று பொங்கல் உற்சவம் இடம்பெற்றது.

இந்த உற்சவத்தில் பங்குபற்ற அல்லாரையிலிருந்து முதியவர் ஒருவர் வந்திருந்தார். பொங்கல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் எங்கிருந்தோ பறந்து வந்த கருங்குளவிகள் கோவிலில் நின்ற முதியவரை சூழ்ந்து தாக்கியுள்ளன. அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள அருகில் இருந்த தண்ணீர்த் தொட்டிக்குள் பாய்ந்து மூழ்கிக் கொண்டதில் குளவிகள் பறந்து சென்றுள்ளன.

சிறிது நேரத்தின் பின்னர் வெளியே வந்த முதியவரை அங்கு நின்றவர்கள் வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி மருத்தவமனையில் சேர்த்துள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## வீதி சீரமைப்புக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் கயிற்றவளை வீதியின் சீரமைப்பு வேலைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது

நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் ஜெபநேசன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வீதிச் சீரமைப்பு வேலைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-63)

## 57 பேருக்கு அரச காணிகள் இம்மாதம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 57 பேருக்கு அரச காணிகள் இந்த மாதம் வழங்கப்படும் என்று காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணிகள் அற்று பல குடும்பங்கள் உள்ளன. சொந்தக்காணிகள் இல்லாமல் வாடகை மற்றும் உறவினரின் காணிகளில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு சொந்த காணிகள் இன்மையால் வீட்டுத் திட்டம் போன்ற அரச உதவிகளும் கிடைக்காமல் போயுள்ளன.

ஆகவே கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள 57 பேருக்கு தலா இரண்டு பரப்பு வீதம் அரச காணிகள் இந்த மாதம் வழங்கப்படவுள்ளது. அதற்கான அளவீட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த மாதம் அவை மக்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 ஆயிரத்து 804 குடும்பங்கள் காணிகள் இன்றி உள்ளனர். இதில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவிலேயே அதிகமாக 2 ஆயிரத்து 265 குடும்பங்கள் காணியற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆச்சரியமளிக்கிறது

## கூறுகிறார் துரைராசசிங்கம்

மட்டக்களப்பு, ஜூலை 6

இராணுவத்தினரால் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் தொடர்பான வழக்கிலே திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. இது இலங்கையின் நீதித்துறையை கேள்விக்கு உட்படுத்துகின்றது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை மாணவர் படுகொலை தொடர்பிலான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்புத் தரப்பினர் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

மயிலந்தனைப் படுகொலை. குமாரபுரம் படுகொலை என்பவற்றோடு திருகோணமலை மாணவர் படுகொலையும் இலங்கையின் நீதித்துறையை கேள்விக்கு உட்படுத்துகின்றது.

நீதித்துறை என்பது தனியே நீதிமன்றத்தை மட்டும் சுட்டுவதல்ல. பொலிஸாரும். வழக்குத் தொடுனர் தரப்பினரும் நீதி வழங்குவதில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். சாட்சிகளைத் தொகுத்தல். அவற்றை நெறிப்படுத்தல் என்பன இந்த இரு துறையினரதும் கடமையாகும். குற்றச் செயலொன்று நடைபெற்றுவிட்டது என்பது வெளிப்படை அதை நிரூபிப்பதற்கான சகல பொறுப்பும் குறிப்பிட்ட இவ்விரு துறையினரையும் சார்ந்ததேயாகும். வெளிப்படையாகத் தெரிகின்ற இந்தக் குற்றச் செயல் நிரூபிக்கப்படவில்லை என்றால் இந்த இரு துறையினரும் தான் பொறுப்புக் கூற வேண்டும். இவர்களுடைய ஒன்றித்த செயற்பாடுதான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு காரணமாயிருக்கும்.


அனைத்து மக்களும், ஏன் பன்னாட்டுச் சமூகமும் அகலக் கண்விரித்து பார்த்துக் கொண்டிருக்கின்ற இந்த வழக்கு சரியான சாட்சியங்கள் இல்லாமையால் மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த முடியாத நிலையிலே குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நீதிவான் நீதிமன்றம் விடுதலை செய்திருக்கின்றது. வழக்குச் சரியான முறையிலே நடத்தப்படாவிட்டால் நீதிமன்றம் இதைவிட வேறொன்றையும் செய்ய முடியாது. இருப்பினும் இத்தீர்ப்பின் மூலம் எடுத்த எடுப்பிலேயே நீதித்துறைதான் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும்.

அந்தவகையிலே நம்நாட்டு நீதித்துறையை தலைகவிழச் செய்துள்ள பொலிஸாரும். வழக்குத் தொடுப்புத் தரப்பினருமே இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாவர். இந்த வழக்கு தொடர்பான சம்மந்தப்பட்ட இரு துறையினர் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

இவ்வாறான நிலையில் போர்க்குற்றங்கள் பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு அலட்சியம் செய்தால் பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் அரசு மதிப்பிழக்க வேண்டிவரும் என்ற எச்சரிக்கையையே இந்தத்தீர்ப்பு வெளிப்படுத்துகின்றது - என்றார். (ஓ.5.105)

# தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இனியாவது நீக்குங்கள்!

## அமெரிக்க அயலுறவுப் பிரதிநிதிகளிடம் ஜனநாயகப் போராளிகள் கட்சி கோரிக்கை



வவுனியா. ஜூலை 6

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் அமெரிக்க அயலுறவு செனட் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள னர்.

ஜனநாயக வழிமுறைகள் மூலமான தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள இலங்கையில் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள கடப்பாட்டுக்கு மதிப்பளித்தும். போராளிகள் அனைவருக்கும் ஜனநாயக விழுமியங்களின் பால் நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக அமெரிக்கா புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

மாறி வருகின்ற தேசிய மற்றும் பன்னாட்டு அரசியல் நிலைமாற்றங்கள் தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கும் அமெரிக்க அயலுறவு செனட் பிரதிநிதிகளுக்குமிடையிலான உயர்மட்டச் சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீர்வு முயற்சிகள் தொடர்பாக அரசமைப்புப் பொறிமுறைகளில் தமக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனங்களை அமெரிக்கத் தூதுக்குழுவிடம் எடுத்துரைத்தோம்.

### திருப்புமுனைக்கு வந்துள்ளோம்

அமெரிக்க மற்றும் இந்தியாவின் இடையீட்டு முயற்சிகளூடாகக் கொண்டு வரப்படுகின்ற 13 ஆவது திருத்தச் சட்ட ஏற்பாடுகளின் நடைமுறைகள் புரையோடிப்போயிருக்கின்ற நிலையில், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொள்ளும் திருப்புமுனைக்கு தாம் வந்துள்ளோம். தமிழர் அரசியலில் நிலவும் வேற்றுமைகளும் இடர்பாடுகளும் தீர்வு முயற்சிகளில் தமிழர் தரப்பின் வகிபாகத்தைச் சீர்குலைக்கவுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

### அமெரிக்க நலன்களில் புலிகள் தலையிடவில்லை

தாயகப் பிரதேசங்களில் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்திருக்கும் போராளிகளின் நிலைப்பாடுகளுக்குச் செவிமடுத்து. அமெரிக்காவின் நலன்களுக்கெதிரான செயற்பாடுகளில் புலிகள் ஒருபோதும் குறுக்கிட்டிருக்கவில்லை என்பதையும் அவர்களின் கவனத்துக்குக்கொண்டுசென்றோம். தமிழரின் நியாயமான அபிலாஷைகளை நிறை வேற்றும் முகமாக தமிழர் தரப்பின் அனைத்து அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் ஜனநாயகப் போராளிகளின் முயற்சிக்கு அமெரிக்காவின் இராஜரீதியான ஆதரவும் கோரப்பட்டது.

குறித்த சந்திப்பின் முக்கியத்துவம் சம்பந்தமாக கூறிய அமெரிக்காவின் வெளிவிவகாரக் குழுவின் சிரேஷ்ட துறைசார் அலுவலர் டேமியன் மெர்பி இந்தச் சந்திப்பு தமிழர் அரசியற் பரப்பை மேலும் புரிந்து கொள்ளக் கிடைத்த இராஜரீக வாய்ப்பு என்று சுட்டிக் காட்டினார் என்று மேலும் தெரிவித்தார். (த)

# அரசியல் கட்சிகள் விற்பனையை தடுக்க புதிய சட்டம் உருவாக்கம்

## தேர்தல்கள் ஆணைக்குழு யோசனை

கொழும்பு, ஜூலை 6

அரசியல் கட்சிகளை விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்றை உருவாக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நிபுணர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்வைத்த விடயங்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் உரிமையாளர்கள் தேர்தல் காலங்களில் தமது கட்சிகளை அதி கூடிய தொகைக்கு விற்பனை செய்கின்றமை தொடர்பில் கடந்த வருடங்களில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்போது, குறித்த கட்சிகளில் பதவிகளை வகிக்கும் நபர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை ஜனநாயக அரசியலுக்கு பெரிய அச்சுறுத்தல் என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து. அரசியல் கட்சிகள் விற்பனை செய்யப்படுவதை தடுக்கும் வகையில் துரிதமாக சட்டம் உருவாக்கப்படவுள்ளது. (ஓ.5)

# பன்னாட்டு சிலப்பதிகார மாநாட்டுக்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

தமிழின் முதற்காப்பியமாகப் போற்றப்படும் சிலப்பதிகாரத்துக்கு அனைத்துலக நிலையில் முதலாவது சிலப்பதிகார மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27,28,29 ஆம் திகதிகளில் ஆஸ்திரேலியாவில் சிட்னி மாநகரில் நடைபெறவுள்ளது.

விழாவில் சமர்ப்பிக்கப்படுவதற்காகவும், விழா மலருக்காகவும் சிலப்பதிகாரம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளைத் துறைசார்ந்தவர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து மாநாட்டுக் குழுவினர் வேண்டியுள்ளனர்.

ஆய்வு நோக்கில் சிலப்பதிகாரத்தை மையமிட்டுக் கட்டுரைகள் எழுதப்படல் வேண்டும் எனவும் தமிழிசைக்குச் சிலப்பதிகாரம் ஆற்றிய பங்குகள், சிலப்பதிகாரம் கூறும் நீதிகள், சிலம்பு காட்டும் தமிழரின் தொன்மை முதலிய விடயப் பொருள்களில் கட்டுரைகள் அமையலாம்.

ஏ 4 தாளில் 5 பக்கங்களுக்கு கூடாமல் யுனிகோட் எழுத்துருவில் கட்டுரைகள் எழுதப்படவேண்டும் எனவும் மாநாட்டுக் குழுத் தலைவர் கலாநிதி இ.மகேந்திரன் அறிவித்துள்ளார்.

எழுதப்பட்ட கட்டுரைகளை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பதாக r.mahendran@hotmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கைவிலங்குகள் இல்லாது சிகிச்சை பெறும் வி.ஐ.பிக்கள்

கொழும்பு, ஜூலை 6

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்து க்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு. கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவும் கைதாகி விளக்கமறியல் உத்தரவின் கீழ் மருத்துவமனைகளில் சிறைக் காவலர்களின் பாதுகாப்பில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறும் பொலிஸ் மா அதிபர் பூஜித்துக்கு கட்டில் விலங்கோ. அல்லது கை விலங்கோ இன்று வரை இடப்படவில்லை எனவும், மருத்துவர்களின் ஆலோசனைக்கு அமைய அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் கொழும்பு விளக்கமறியல் சிறைத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் இருதய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, குறித்த சிகிச்சை அறையில் இருந்து கட்டணம் செலுத்தப்படும் சிகிச்சை அறைக்கு மாற்றப்பட்டுள்ளார் (ஓ.5)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக ஏழு தீர்மானங்கள்

## கண்டியில் நாளை நிறைவேற்றுகிறது பொதுபலசேனா

கொழும்பு. ஜூலை 6

இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக 7 தீர்மானங்களை நிறைவேற்றவுள்ளதாக பொதுபலசேனா அமைப்பு அறிவித்துள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை கண்டியில் இடம்பெறவுள்ள மாநாட்டில் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாக பொதுபலசேனா குறிப்பிட்டுள்ளது.

பொதுபலசேனா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் காலை 9 மணியளவில் கண்டி தலதா மாளிகையில் வழிபாடுகள் இடம்பெறவுள்ளதோடு, இதில் நூற்றுக்கணக்கான பௌத்த குருமார்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அத்தோடு கட்சி பேதமின்றி சகல அரசியல் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின் நோக்கம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முற்றாக இல்லாதொழிப்பதோடு. அனைத்து இன மக்களையும் ஒரே நாடு ஒரே சட்டம் என்பதின் கீழ் நெறிப்படுத்துவதாகும். அனைத்து இன மக்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பின்னரே அரசும். ஏனைய தரப்புக்களும் இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து கவனஞ்செலுத்தின. ஆனால் பொதுபலசேனா அமைப்பு இதனை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்தது.

இனியொரு பயங்கரவாத் தாக்குதல் இடம்பெற்றுவிடக் கூடாது என்பதில் பொதுபல சேனா தொடர்ந்தும் செயற்படும். அதற்கான முதல் நடவடிக்கையாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை. மாநாடு நடைபெறும் தினத்தில் முஸ்லிம்கள் அத்தியவசிய தேவை இன்றி கண்டி நகருக்கு செல்வதையும். கண்டி நகர் ஊடாக பயணம் செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ.5)

கட்டடப் பொருள்களின்

## தரத்தையும்விலையையும் உறுதிசெய்யக்கோரிக்கை

வவுனியா, ஜூலை 6
வவுனியாவில் கட்டடப்பொருள்களின் விலையையும், தரத்தையும் உறுதிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது பற்றிய கோரிக்கையை மக்கள் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசாவிடம் விடுத்துள்ளனர். இது பற்றிய கடிதம் மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
பொருள்களின் விலை மற்றும் அவற்றின் தரத்தைச் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து)

# தலைவர் பிரபாகரன் தொடர்பில் மைத்திரியின் கருத்து மோசமானது

*சாடுகிறார் இராதாகிருஸ்ணன்*

கொழும்பு, ஜூலை 6
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தானது தமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலைஎனும்வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாண ஹங்குராங்கெத்த எலமுல்ல கபரகல தமிழ் வித்தியாலயத்துக்கான வகுப்பறை கட்டடத் தொகுதி மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணனால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
போதைப்பொருகளை ஒழித்துக்கட்டுவதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். இதற்கு நாமும் முழு ஆதரவையும் வழங்க தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அவர் கடந்த வாரம் வெளியிட்ட கருத்து தான் எமக்கு மனக்



கவலையை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அவர்களையும், போதைப்பொருள் வர்த்தகத்தையும்தொடர்புபடுத்திக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. தமிழ் மக்களை கொச்சைப்படுத்தும் செயலாகவே பார்க்கின்றோம். போதையை ஒழிக்கவேண்டும் என்ற அரச தலைவரின் கொள்கை சரியானது. ஆனால், அதனை மையப்படுத்தி தமிழ் மக்களின் மனங்களை புண்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிடக்கூடாது - என்றார். (ஒ.5)

## அரசியல் பலம் இல்லாது தமிழருக்கு அபிவிருத்தியில்லை

*வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 6
அரசியல் பலம் இல்லாது தமிழர்களுக்கு அபிவிருத்தி உள்ளிட்ட எதுவும் கிடைக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.
கண்டி, கந்தகிட்டிய தமிழ் வித்தியாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டுமாடிக் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கண்டி மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகள் கடந்த காலங்களில் அபிவிருத்தியின்போது ஓரங்கப்பட்டன. தமிழ் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் தமிழ் பாடசாலைகளை வளப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொதுத் தேர்தலின்போது உறுதியளித்தோம்.
இரு தசாப்தங்களுக்கு பிறகு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மக்களின் ஆதரவில் கிடைத்தது. அன்று உங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதான விடயங்களை குறுகிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றியுள்ளோம். மேலும் பல விடயங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.
வாக்குரிமை மூலம் மக்கள் வழங்கிய பேரம் பேசும் சக்தியாலேயே எம்மால் இவற்றைச் செய்யக் கூடியதாக இருந்தது. அரசியல் பலம் இல்லாதுவிட்டால் எமக்கு எதுவுமே கிடைத்திருக்காது என்பதே உண்மையாகும்.
வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதம் மக்கள் வசம் இருக்கின்றது. எனவே, தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை கண்டி மாவட்டத்தில் தக்கவைத்து மேலும் பலப்படுத்துவதற்கு மக்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.
அரசியல் பலத்தை இல்லாமல் செய்யவே பேரினவாதிகளின் ஒப்பந்தத்தை ஏற்று எங்களைச் சூழவுள்ளவர்களே துரோக அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். துரோகச் செயல்களுக்கு கண்டிவாழ் தமிழர்கள் என்றும் துணைபோக மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது - என்றார். (ஒ.5)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 6
யாழ்ப்பாணம் சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அருள்மிகு சிறி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும்,15 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை
தீத்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.(ஐ)

## ஆனி உத்தரம்

யாழ்ப்பாணம்,ஜூலை6
நீர்வேலி கந்த சுவாமி கோவிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆனி உத்தர உற்வசம் நடைபெறும்.
அன்றைய தினம் மாலை 4 மணிக்கு சிறப்பு அபிசேகம், பூசை இடம்பெற்று சுவாமி திருமஞ்சத்தில் அரோகரித்து வீதி வலம் வருவார்.
மறுநாள் திங்கட்கிழமை கலை 8 மணிக்கு நடேசர் அபிசேகம்,தீர்த்த உற்சவம் என்பன இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-17)

## ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஒருநாள் சேவை திடீர் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 6
தொழிநுட்ப கோளாறு காரணமாக ஆள்பதிவு திணைக்களத்தால் வழங்கப்படும் ஒரு நாள் சேவைகளுடனான தேசிய அடையாள அட்டை விநியோக நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக ஆள்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.
நேற்று வெள்ளிக்கிழமை மாத்திரம் குறித்த நடவடிக்கை இடம்பெறாதென ஆள்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் ஜெனரல் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.
கணினி பிரிவில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாகவே சேவை தடைப்பட்டதாகவும் ஆனால் மீண்டும் சேவையை வழமைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

*இலஞ்சக் குற்றச்சாட்டில்*

## முன்னாள் தவிசாளருக்கு கடூழியச்சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூலை 6
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உள்ள தெரணியகல பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சம்பிக்க விஜேசிங்கவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 24 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
பிரதிவாதி மீதான ஊழல் குற்றச்சாட்டு உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டமையால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
2008 ஆம் ஆண்டு தெரணியகல பிரதேச சபையின் தவிசாளராகச் செயற்பட்ட போது, வீதி சமிக்ஞைக்கான சான்றுப் பத்திரம் வழங்குவதற்காக 5 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றமை உள்ளிட்ட 6 குற்றச்சாட்டுகள் சம்பிக்க விஜேசிங்க மீது சுமத்தப்பட்டது.
அதில் 4 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டமையால் பிரதிவாதிக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, பிரதிவாதிக்கு 4 இலட்சம் ரூபா தண்டமும் விதித்துள்ளார்.
தண்டத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என உத்தரவிடப்பட்டுள்ளது.
இலஞ்சத்தை வழங்கிய நபருக்கு இரண்டரை இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிபதி அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிபதி, அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். (ஒ.5)

# அடிப்படைவாதிகளின் பணத்துக்கு தலைவர்கள் அடிமையாகிவிட்டனர்

*கம்மன்பில கொதிப்பு*

கொழும்பு, ஜூலை 6
இந்த நாட்டின் தலைவர்கள் வகாப் அடிப்படைவாதிகளின் பணத்துக்கும் வாக்குகளுக்கும் ஆசைப்பட்டு, அவர்களை பாதுகாக்கும் நிலைமைக்குத் தற்போது தள்ளப்பட்டுள்ளார்களென நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
நுகேகொட பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய தேசியக் கட்சி அடிப்படைவாதிகளின் போராட்டத்தையே இன்று வெற்றியடைச் செய்துள்ளது. அதே நேரம், நாடாளுமன்றில் 21 முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளார்கள். அமைச்சர்கள் 9 பேர் இருந்தார்கள். ஆனால், நாம் ரிசாத் பதியுதீன் மீது மட்டும்தான் குற்றஞ்சாட்டுக்களை முன்வைத்திருந்தோம்.
அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ஒன்றிணைந்து, தமது பதவிகளைத் துறந்தார்கள். இது நாட்டுக்கு ஆபத்தான ஒரு செயற்பாடாகும்.
மீண்டும் இலங்கை பழைய நிலைமையை நோக்கித்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஜூலை 23 ஆம் திகதி, நான் ஒரு சிறப்புத் தகவலொன்றை வெளியிடவுள்ளேன். இந்த நாடு எந்த ஆண்டில் முழுமையான முஸ்லிம் நாடாக மாற்றமடையும் என்பதை நான் அனைத்து ஆதாரங்களுடனும் தெரியப்படுத்தவுள்ளேன்.
முஸ்லிம் சமூகத்தில் இன்று வகாப் அடிப்படைவாதம் தலைத்தூக்கி இருப்பதால், இந்த நாடு முஸ்லிம் நாடாக மாற்றமடைவதை நாம் என்றும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை - என்றார். (ஒ.5)

# நல்லாட்சி அரசே கல்விக்கு அதிகமாக நிதி ஒதுக்கியது

## மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 6
இலங்கையில், இதுவரை எந்த அரசுமே மேற்கொள்ளாத வகையில், நல்லாட்சி அரசு கல்விக்கு அதிகளவிலான நிதியை ஒதுக்கியுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கல்வியும் சுகாதாரமும் தான் ஒரு நாட்டுக்கு மிகவும் முக்கியமான விடயங்களாக காணப்படுகிறது. எமது நாட்டில் ஆண்களின் ஆயுள்காலம் 70 ஆகவும் பெண்களின் ஆயுள்காலம் 72 ஆகவும் இருக்கிறது. எமது நாட்டில் 100 வயது வரை வாழ்பவர்களும் இருக்கிறார்கள். இதுபோன்றவர்களின் வாழ்க்கை முறையை இப்போதைய தலைமுறையினர் அவதானிக்க வேண்டும்.
மதுபாவனை, சிகரட் பயன்படுத்துபவர்களுக்கே ஆயுள் குறைவாக இருக்கிறது. இது நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்ற நிலைமை கிடையாது.
இன்று அனைத்து விடயங்களிலும் போட்டி ஏற்பட்டுள்ளது. இதற்காகவே, நாம் எந்தவொரு அரசும் மேற்கொள்ளாத அளவில், கல்விக்காக அதிகளவிலான நிதியை ஒக்கியுள்ளோம்.
தற்போது பொலன்னறுவையில், இலங்கையின் முதலாவது தொழில்நுட்ப நூதனசாலையை திறந்து வைத்துள்ளோம். இதன் பெறுபேறுகளை அனைத்து மாணவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான் எமது நோக்கம்ாகும். அரசு என்ற ரீதியில், இவ்வாறான செய்றபாடுகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம் - என்றார். (ஓ.5)

# ஷரியா சட்டத்துக்கு அமைவாக காத்தான்குடியில் 20 பேர் கொலை

## புதுத்தகவலை வெளியிட்டார் பேராசிரியர் அபேதிஸ்ஸ தேரர்



கொழும்பு, ஜூலை 6
காத்தான்குடியில், ஷரியா சட்டத்துக்கு அமைவாக இதுவரை 20 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். இதற்கான ஆதாரங்களும் தரவுகளும் உள்ளதாகவும் அவர் கூறினார்.
வகாப் அடிப்படைவாதத்துக்கு எதிரான மாநாடு நுகேகொடையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டிருந்தபோதே அபேதிஸ்ஸ தேரர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காத்தான்குடி பிரதேசத்தில் ஷரியா சட்டத்துக்கு அமைவாக 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அரசுக்கு தகவல் வழங்கியமை, வட்டிக்கு கடன் வழங்கியமை, விபசாரம் மேற்கொண்டமை, சூதில் ஈடுபட்டமை, இஸ்லாம் மதத்தை விட்டு வேறு ஒரு மதத்தை பின்பற்றியமை மற்றும் இராணுவத்தில் இணைந்துக் கொண்டமை ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டோரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் கள்.
இந்த செயற்பாட்டுக்காக 20 பேர் ஷரியா சட்டத்துக்கு இணங்க, காத்தான்குடியில் கொல்லப்பட்டுள்ளார்கள் என்புதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
இதற்கான அனைத்துத் தரவுகளும் என்னிடம் உள்ளன. இனியும் நாம் பிரிந்து செயற்பட்டால் அது நாட்டுக்கே ஆபத்தாக அமைந்துவிடும்.
அனைவரும் இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றிண்ணந்து, இதற்கெதிரான போராட்டத்தில் ஈடுபடவேண்டும் - என்றார். (ஓ.5)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்

# பாதிக்கப்பட்ட வர்த்தகத்துறையினருக்கு விரைந்து உதவிகள் வழங்கப் பணிப்பு

கொழும்பு, ஜூலை 6
உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலால் செயலிழந்துள்ள சுற்றுலாத்துறை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட துறைகளின் வர்த்தகர்களுக்கான உதவியளிக்கும் நடவடிக்கையை முறையாகவும்வினைத்திறனாகவும் மேற்கொண்டு குறித்த வர்த்தகசமூகத்தினரை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகுமென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகளுடன் அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்து ரையாடலின்போதே அரச தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
சுற்றுலாத்துறை அமைச்சு, நிதி அமைச்சு, வர்த்தக அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்க ளின் தலைவர்களும் இக்கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், வர்த்தக சமூகத்தினர் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.
சுற்றுலாத்துறையை பாதிக்கும் காரணிகள், வரிகள் காரணமாக எதிர்நோக்கியுள்ள சிரமங்கள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் நடத்தைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது அரச தலைவரிடம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
இந்த வர்த்தகர்களுக்கு உதவியளிப்பதற்காக அமைச்சரவை உப குழுவொன்றை நிறுவி நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியினூடாக உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அதன் கீழ் மட்டத்திலுள்ள நிறுவனங்களால் குறித்த அறிவுறுத்தல்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அரச தலைவர், குறித்த அமைச்சரவை உப குழுவுக்கும் அமைச்சரவையிலும் கலந்துரையாடி தேவையான உதவி வேலை த்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதாக தெரிவித்தார்.
சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, நிதி அமைச்சு, வர்த்தக அமைச்சு, மத்திய வங்கி உள்ளிட்ட நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக சம்மேளனத்தின் முப்பது சங்கங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில்கலந்துகொண்டனர். (ஓ.5)

# பொலிஸாரிடம் பறிக்கப்பட்ட துப்பாக்கி மட்டக்களப்பில் நேற்று கண்டெடுப்பு

மட்டக்களப்பு, ஜூலை 6
மட்டக்களப்பு புதூர் பகுதியில் பொலிஸாரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட கைத்துப்பாக்கி பறிக்கப்பட்ட இடத்துக்கு அருகாமையி லேயே மீட்கப்பட்டது. அந்த துப்பாக்கி கிணற்றில் வீசப்பட்டதாக முன்னர் தகவல் வெளியாகிய நிலையில் அந்தப் பகுதியில் உள்ள கிணற்றை இறைத்து அதில் தேடுதல் நடவடிக்கையை பொலிஸார் நேற்று மாலை மேற்கொண்ட போதும் துப்பாக்கி கிடைக்கப் பெறவில்லை.
எனினும் அந்தப் பகுதியில், இராணுவத்தினர், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் தேடுதல் மற்றும் விசாரணைகளை மேற் கொண்டு வந்ததன் அடிப்படையில் பொலிஸாரிடமிருந்து பறிக்கப்பட்ட புதூர் எனும் இடத்திலேயே வழியோர மாக துப்பாக்கி மீட்கப்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித்த னர்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 2 பொலிஸார் உட்பட விபத்தில் காயமடைந்த 4 பேர் மட்டக் களப்பு போதனா மருத்துவமனையில் தொடர்ந் தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் 21 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

**பின்னணி**

மட்டக்களப்பு புதூர், திமிலைதீவுப் பகுதியில் தலைக்கவசம் அணியாமல் உந்துருளியில் பயணித்த இருவரை தடுத்து நிறுத்துவதற்கு போக்குவரத்து பொலிஸார் மறித்துள்ளனர்.
நிறுத்தா மல் சென்ற இருவரும், எதிரே வந்த பட்டா ரக வாகனத்துடன் மோதி விபத்து க்குள்ளாகியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் குவிந்த இளைஞர்கள் சிலர் போக்குவரத்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்ததாகவும் பொலிஸாரால் கூறப்படுகின்றது. இதன்போது போக்குவரத்து பொலிஸாரின் கைத்துப்பாக்கியை ஒருவர் பறித்துக்கொண்டு ஓடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணம் சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 15 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய அறங்காவற் சபை அறிவித்துள்ளது. (ஐ)



## ஈருருளி கையளிப்பு

வவுனியா, ஜூலை 6
வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவான சாட்நீகன் இந்த உதவியை வழங்கியுள்ளார்.
பெற்றோரை இழந்து உறவினர்களுடன் மடு பண்டிவிரிச்சான் பகுதியில் வசித்து வரும் இரு மாணவிகளின் கற்றல் செயற்பாட்டை ஊக்கிவிக்கும் முகமாக ஈருருளி ஒன்று வழங்கிவைக்கப்பட்டது. (ஐ)

## கலைஞர்கள் ஒன்றுகூடலும் ஆற்றுகை நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 6
கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் மற்றும் ஆற்றுகை நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், கலை மன்றத்தின் அங்கத்தவர்களை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். (ஐ)

# பொதுபலசேனாவின் மாநாட்டுக்கு தடை விதிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 6
அவசரகால சட்ட நிபந்தனைகள் மற்றும் குற்றவியல் சட்ட விதிமுறைகளின் அடிப்படையில் பொதுபலசேனாவால் கண்டியில் நடத்த திட்டமிட்டிருக்கும் மாநாட்டுக்கு நீதிமன்ற தடை உத்தரவொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முஸ்லிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு பதில் பொலிஸ்மா அதிபரிடம் மனுக் கையளித்துள்ளது.
இதுதொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் ஐ.என்.எம்.மிப்லால் தெரிவித்ததாவது:
பொதுபலசேனா அமைப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை கண்டி நகரில் மாநாடொன்றை நடத்த திட்மிட்டி ருக்கின்றது. இந்த மாநாட்டுக்கு ஒரு இலட்சம் பௌத்தர்களும் 10 ஆயிரம் தேரர்களும் ஒன்று கூடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. முஸ்லிம்களின் தனித்துவ அடையாளங்கள் மற்றும் மத அடிப்படையிலான விடயங்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதே மாநாட்டின் நோக்கமாகும்.
பொதுபலசேனா அமைப்பு கடந்த காலங்களில் மேற்கொண்ட இவ்வாறான கூட்டங்களுக்கு பின்னர் நாட்டில் பெரிய கலவரங்கள் ஏற்பட்ட வரலாறு இருக்கின்றது. அளுத்கம, திகன போன்ற சம்பவங்களின்போது முஸ்லிம்களின் சொத்துக்கள் பெரியளவில் அழிக்கப்பட்டன. இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதனால் மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பது பாதுகாப்புக்கு பொறுப்பானவர்களின் கடமையாகும் - என்றார். (ஓ.5)

# புலிகளை ஆதரிப்பது துரோகமென்றால் அதையே நான் தொடர்ந்தும் செய்வேன்

## தீர்ப்பின் பின் வைகோ தெரிவிப்பு



சென்னை ஜூலை 6

இந்தியத் தேசத்துரோக வழக்கில் தண்டனைபெற்ற ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, தான் தொடர்ந்து விடுதலைப்புலிகளை ஆதரிக்கப்போவதாகவும், தான் செய்தது தேசத் துரோகமல்ல என்றும், இது தேசத் துரோகமென்றால் அதைத் தான் தொடர்து செய்யப்போவதாகவும் கூறினார். தண்டனை அறிவிக்கப்பட்ட பிறகு நீதிமன்றத்துக்கு வெளியில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

“தமிழீழவிடுதலைப்புலிகளைஆதரித்துப் பேசியதற்காக இன்று எனக்கு மகிழ்ச்சியான நாள். இந்திய அரசு, ஆயுதஉதவியும்பணஉதவியும்செய்ததால், உலக நாடுகளிடம் ஆயுதம் வாங்கி, சிங்களப் பேரினவாத மகிந்த ராஜபக்சவின் அரசு லட்சக்கணக்கான தமிழர்களைக்கொன்றுகுவித்ததுஎன்பதைத்தலைமைஅமைச்சராகஇருந்த மன்மோகன் சிங்கிடம் நேரடியாகச் சென்று மனுவாக அளித்தோம்.

17 முறை அவரை இதற்காகச் சந்தித்திருக்கிறேன். இந்தக் கடிதங்களைத் தொகுத்து நூல் வெளியிடப்பட்டது. அதன்படிஎன்மீதுதேசத்துரோகவழக்குத்தொடரப்பட்டது.

ஆமாம் நான் அப்படித்தான் பேசினேன். இலங்கைத் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டால் நாதி இல்லையென்றுபோய்விடாது. இங்கிருந்து ஆயுதம் ஏந்திச் சென்று போராடத் தயாராகவும் இருப்பார்கள். நான் அதற்கு தலைமை ஏற்றுச் செல்வேன் என்று பேசினேன்.

அந்தவழக்கைநீதிமன்றம்விசாரித்தது. இப்படிப் பேசினீர்களா? என்றால், ஆமாம் அப்படித்தான் பேசினேன் என்று சொன்னேன். ஈழத் தமிழர் படுகொலைக்கு இந்திய அரசு காரணமென்று பேசினேன்.

அவர்கள் நாதியற்றுப் போகமாட்டார்கள் என்று பேசினேன். இங்குள்ள இளைஞர்களைத் திரட்டிக்கொண்டு போவீர்களா ?என்று கேட்டபோது, ஆமாம் என்றேன். ஆயுதம் ஏந்திப் போராடச் செல்வீர்களா? என்று கேட்டபோது ஆமாம் என்றேன். எதையும் நான் மறுக்கவில்லை. இது ஒன்றும் தேசத் துரோகம் கிடையாது. ஈழத் தமிழினம்அழிக்கப்பட்டதற்கு, அவர்களுக்காக போராடிய புலிகளைப் பற்றி நாடாளுமன்றத்திலேயே பேசினேன். இதற்காக 19 மாதங்கள் சிறையில் இருந்தேன். நேற்றும்விடுதலைப்புலிகளை ஆதரித்தேன். இன்றும்ஆதரிக்கிறேன், நாளையும்ஆதரிப்பேன். தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியது குற்றமா? என வேலூர் சிறையில் இருந்தபடி மனுத்தாக்கல் செய்தேன். ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினார்கள்.

தொடர்ந்து விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிக்கொண்டுதான் இருப்பேன். இளைஞர்களின் உள்ளத்தில் இதை விதைப்பதால் எனக்குத் தண்டனை என எழுதியிருக்கிறார்கள். விதைப்பேன். விதைத்துக்கொண்டே இருப்பேன். ஆயுள்தண்டனைஎன்றாலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன்”- என்றார்.



# கைது செய்த ஆஸி. நாட்டவரை விடுவித்தது வடகொரியா

பிஜோங்யாங்,ஜூலை 6

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவர்வடகொரியாவால்கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். அலெக் சிங்லே(வயது29)என்கிறமாணவரேஇவ்வாறு விடுவிக்கப்பட்டார். அவர் தான் தற்போது நலமாக இருப்பதாகத் தெரிவித்தார். வடகொரியாவின் கில்இல்சங்பல்கலைகழகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தஅலெக்சிங்லேகடந்தசில நாள்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தார்.

அவர் எங்கிருக்கிறார், என்ன ஆனார் என்பது குறித்த தகவல்கள் தெரியாத நிலையில் அவரது பெற்றோர்கள் இருந்தனர். இந்த நிலையில் வடகொரிய அரசால் அவர் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட அலெக், “நான் நலமாக இருக்கிறேன். நான் எனது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியதற்காக மகிழ்ச்சியாக இருக்கிறேன்” என்று தெரிவித்தார்.

மேலும்ஆஸ்திரேலியத்தலைமைஅமைச்சர் மோரிசனுக்கு அலெக் நன்றி தெரிவித்தார். வடகொரியாவால் அலெக் சிங்லே எதற்காகக் கைது செய்யப்பட்டார். என்பது குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. ஆனால், தனதுதனிப்பட்டவாழ்க்கைக்குஊடகங்கள்மதிப்பளிக்கவேண்டும் என்று அலெக் கேட்டுக் கொண்டார்.

# ஈரானின் கப்பலை கைப்பற்றியது பிரிட்டன்

லண்டன், ஜூலை 6

தென்ஐரோப்பாவில்ஸ்பெய்ன்நாட்டையொட்டி அமைந்துள்ள பிரிட்டனின் ஆளுகைப் பகுதியான ஜிப்ரால்டரை அண்மித்த கடலில் வைத்து ஈரானின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலைப் பிரிட்டன் கடற்படை கைப்பற்றியது.


ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை மீறிச் சிரியாவுக்கு எண்ணெயைக் கொண்டு சென்றதாகக் கூறியே குறித்த கப்பலைப் பிரிட்டன் கைப்பற்றியதாகப் பிரிட்டனின் செய்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஜிப்ரால்டர் அரசின் தலைமை அமைச்சர்பபியன்பிச்சார்டோவின் பணிப்புரையின்படியே இந்தக் கப்பலைப் பிரிட்டன் கடற்படை கைப்பற்றியதாக ஜிப்ரால்டரின் தகவல் துறை அமைச்சு அறிவித்தது.

இதற்கு ஈரானின் அயலுறவு அமைச்சு அதிருப்தி வெளியிட்டது. எங்கள் எண்ணெய்க் கப்பலைப் பிரிட்டன் கைப்பற்றியமை சட்டவிரோதமானதும், ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். இது இமலாயத் தவறு என ஈரானின் அயலுறவு அமைச்சர்கூறினார். ஈரான்-அமெரிக்கா இடையே மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில் ஈரானின் கப்பலைஅமெரிக்காவுக்குஆதரவளிக்கின்ற பிரிட்டன் கைப்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.







# இன்றைய நாள்

**மேடம்:** சிலர் தவறான ஆலோசனை சொல்லலாம். உங்கள் நேர்மை குணத்திற்கு அவப்பெயர் வராத வகையில் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சில் மங்கலத் தன்மை நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போகும் நன்னிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழிக்கும்.

**மிதுனம்:** எதிர்வரும் சிரமங்களை தாமதமின்றி சரி செய்வது நல்லது. நல்லவர்களின் ஆலோசனையால் நம்பிக்கை கொள்வீர்கள். அதிக உழைப்பினால் பணவரவு சீராகும்.

**கடகம்:** கலை உணர்வுடன் நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். வாழ்வில் குறுக்கிட்ட சிரமங்களை பற்றிய சிந்தனை குறையும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**சிம்மம்:** பிடிவாத குணத்தால் சிலரது அதிருப்திக்கு ஆளாவீர்கள். பேச்சில் நிதானம் பின்பற்றினால் பிரச்னை ஏற்படாது. தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும்.

**கன்னி:** மனதில் அன்பு எண்ணம் அதிகரிக்கும். உயர்வு, தாழ்வு கருதாமல் அனைவரையும் மதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** சாந்த குணத்துடன் செயல்படுவீர்கள். செயல்களில் வெற்றி பெற தேவையான அனுகூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். மற்றவரை நம்பி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில்,வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது.

**தனுசு:** திட்டமிட்ட பணி நிறைவேற தாமதம் ஏற்படலாம். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும்.

**மகரம்:** எதிரி தொல்லை மறையும். தொழில், வியாபார வளர்ச்சியால் கூடுதல் ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** செயல்களில் வெற்றிக்கான கதவு திறக்கும். நண்பர்கள் தேவையான உதவியை வலிய வந்து செய்வர். தொழில், வியாபாரத்தில் பலம் பெற புதியவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மீனம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். திட்டம் நிறைவேறும் முன் முடிவை பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் கிடைக்கும்.


# புலிகளை ஆதரித்துப் பேசியதால் வைகோவுக்கு ஓராண்டுச் சிறை

சென்னை, ஜூலை 6
ம.தி.மு.காவின் பொதுச்செயலர் வைகோவுக்கு எதிராகத் இந்தியத் தேசத் துரோகம் என்பதாக 2009ஆம் ஆண்டில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்றையதினம் வெளியாகியது. அதில் வைகோவுக்கு ஓராண்டுச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா குற்றப் பணமும் (இந்திய மதிப்பில்) விதிக்கப்பட்டது.
அத்தோடு மேல் முறையீடு செய்வதற்கு ஏதுவாக இந்தத் தண்டனை நிறுத்தி வைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதியன்று சென்னையிலுள்ள ராணி சீதை அரங்கில் 'ஐ அக் ஷஸ்' என்ற புத்தகத்தை வெளியிட்ட வைகோ, அந்தக் கூட்டத்தில் இந்திய அரசுக்கு எதிராக, இந்திய அரசு தடை செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சார்பாகப் பேசியதாக அதே ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதியன்று வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கின் முடிவிலேயே இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்பு நீதிமன்றில் இந்த வழக்கை விசாரித்துவந்த நீதிபதி ஜே. சாந்தி நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

**பின்னணி**
2009ஆம் ஆண்டில் வன்னியில் நடந்த இறுதிப் போரில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு உதவி செய்ததாகக் கூறி அப்போதைய இந்தியத்தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்குக்குத் தொடர்ச்சியாகக் கடிதங்களை எழுதினார் வைகோ. அந்தக் கடிதங்கள் தொகுக்கப்பட்டு 'ஐ அக்ஷஸ்' எனும் பெயரில் புத்தகமாக வெளிவந்தன. அந்த நூல் வெளியீட்டு விழா



வில் வைகோ பேசியது குறித்து விமர்சனங்கள் எழுந்தன. அந்த வெளியீட்டு விழாவில் வைகோ பேசியது தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டது. எழும்பூர் நீதிமன்றத்தில் கடந்த 8 ஆண்டுகளாக எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருந்துவந்தது அந்த வழக்கு. இந்த வழக்கில் சரணடைவதாகக் கூறி, 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையான வைகோ, பிணையில் செல்ல மறுத்து 52 நாள்கள் சிறையில் இருந்தார் (இந்த வழக்கில் ஏற்கனவே சிறையில் இருந்திருந்தால், அந்த நாள்களைக் கழித்துக்கொள்ளலாம் என்றும் தற்போதைய தீர்ப்பில் நீதிபதி கூறினார்).
இதற்குப் பிறகு இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. 2018ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டு, வழக்குத் தொடர்பான அனைத்து விசாரணைகளும் முடிவடைந்தன. தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.
தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடுக்கப்பட்ட இந்த வழக்குத் தற்போது தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. இடம்பெற்றிருக்கும் நிலையில், தீர்ப்பிடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



**வெனிசுலா விவகாரம்**

## இளைஞர்களை கொல்வதற்கு தனியான படை

கராகஸ், ஜூலை 6
வெனிசுலா அரசால் உருவாக்கப்பட்ட புதிய படை ஒன்று, அந்த நாட்டு அரசுக்கு எதிராகச் செயற்படுகின்ற இளைஞர்களைக் கொன்று குவிக்கின்றது என்று அண்மைக்காலத்தில் எழுந்திருந்த குற்றச்சாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இளைஞர்களைக் கொல்லும் இந்தப் படையின் தலைவர் மிச்சலா பச்சலெட் என்பவர் என்றும், அவர் அளித்த தகவல்படி கடந்த மே மாதம் 19ஆம் திகதி வரையில் ஆயிரத்து 569 பேர் இந்தப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்தச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
இந்தப் படையை உருவாக்கியவர் வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோதான் என்கிறார் வெனிசுலாவின் புலனாய்வுத்துறை முன்னாள் தலைமை அதிகாரியான மனுவல் கிரிஸ்தோமர் பிகுரா. இந்தப் படைச் சிப்பாய்களில் சிலர் தாங்கள் தாக்குதல் நடத்திக் கொலை செய்யவுள்ள குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவார்கள்.
துப்பாக்கிகள், குண்டுகள் போன்றவற்றைப் புதைத்து வைப்பார்கள். அதன் பின்னர் ஏனைய படையினர் அங்கு வருவார்கள். அங்குள்ள இளைஞர்களை, பெண்களை, ஏனையவர்களை வகை பிரித்த பின்னர் இளைஞர்களை மட்டும் சுட்டுக் கொல்வார்கள். அந்த இடத்துக்குப் படையினர் வந்தபோது அங்குள்ள இளைஞர்கள் தங்களைத் தாக்கியது போலவும் தாங்கள் எதிர்த் தாக்குதல் நடத்தி இளைஞர்களைச் சுட்டது போன்ற ஒரு மாயையை உருவாக்குவார்கள் என்று மனுவல் கிரிஸ்தோமர் பிகுரா மேலும் தெரிவித்தார்.

**துனீசியாவில் சோகம்**

## கவிழ்ந்தது அகதிகள் படகு 80க்கு மேற்பட்டோர் சாவு

டுனிஸ், ஜூலை 6
ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பா நோக்கி அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று கடலில் கவிழ்ந்ததில் 80க்கு மேற்பட்டோர் சாவடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
ஆபிரிக்காவைச் சேர்ந்த அகதிகள் சிலர் லிபியாவில் இருந்து ஐரோப்பாவை நோக்கிப் படகில் பயணம் செய்தனர். 80க்கும் மேற்பட்டோர் பயணித்த அந்தப் படகு ஆபிரிக்காக் கண்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ள துனீசியா நாட்டின் கடற்பகுதியில் கடலுக்குள் கவிழ்ந்தது. இதைக் கவனித்த மீனவர்கள் சிலர் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டு நீரில் மூழ்கியவர்களில் 4 பேரை மீட்டனர்.
மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்



கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் சாவடைந்தார்.
இந்த விபத்தில் 80க்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கிச் சாவடைந்திருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான பிரிவு தெரிவித்தது. ஆபிரிக்காவில் நிலவும் வறுமை, பொருளாதார மந்த நிலை, அரசியல் ஸ்திரமற்ற தன்மை, வறட்சி எனப் பல காரணங்களால் ஆபிரிக்க மக்கள் ஐரோப்பா நோக்கி, இரண்டு கண்டங்களையும் பிரிக்கின்ற மத்திய தரைக் கடலூடாக இவ்வாறான ஆபத்தான பயணங்களை மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மீன்பிடிப் படகு கவிழ்ந்து 27மீனவர்கள் சாவு

### ஹோண்டுராஸில் சம்பவம்

மத்திய அமெரிக்க, நாடான ஹோண்டுராஸில் மீனவர்களின் படகு ஒன்று கரீபியன் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது கவிழ்ந்தது.
இதனால், அந்தப் படகில் இருந்த மீனவர்களில் 27 பேர் சாவடைந்தனர். எல்லாமாகத் 91 பேர் அந்தப் படகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததாகவும் இவர்களில் 55 மீனவர்களை உயிருடன் மீட்டுள்ளதாகவும் சாவடைந்தவர்களைத் தவிர, 9 மீனவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
காணாமல் போனவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது. அங்கு நிலவிய மோசமான வானிலையைக் கருத்தில் கொள்ளாமல் குறித்த மீனவர்கள் கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் சென்றமையே இந்த விபத்துக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.





சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற ஏரி ஒன்றை நீந்திக் கடக்கின்ற போட்டியில் இந்த வருடமும் பலர் பங்கேற்றனர்.

## தூக்கில்...

நேற்று இடைக்காலத் தடை விதித்தது கொழும்பு உயர்நீதிமன்றம்.

தூக்குத்தண்டனையைநிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர்நீதிமன்றில் கடந்த வாரம் ஒரே நாளில் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில் சட்டத்தரணி கே.எச்.டியானகே தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று உயர்நீதிமன்றில் நடைபெற்றது. இந்த மனுவில் சட்ட மா அதிபர், நீதி அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்துவது. அரசமைப்பில் நிறுவப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருக்கும் என்று மனுதாரர்கள் வாதிட்டனர்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் ஆணை அரச தலைவரிடம் இருந்து சிறைச்சாலை ஆணையாளருக்குக் கிடைக்கவில்லை என்றும் அதனால் எதிர்வரும் 17ஆம் திகதிவரை தூக்குத் தண்டனைக் கைதிகள் எவருக்கும் தண்டனையை நிறைவேற்ற முடியாது என்று சட்ட மா அதிபர் சார்பில் அறிவிக்கப்பட்டது. தூக்கு தண்டனையை நிறைவேற்றுவதற்கான இடம், நேரம், திகதி குறித்து அரச தலைவர் இன்னும்அறிவிக்கவில்லைஎன்றுசிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் டீ.எம்.ஜே.டப்ளியூ.தென்னகோன் தெரிவித்தார்.

அதையடுத்துப் பிரதிவாதிகளை ஒக்டோபர் 29ஆம்திகதிமன்றில்முன்னிலையாகுமாறு உத்தரவிட்ட நீதிமன்றம், குற்றவாளிகளைத் தூக்கிலிடும் நடவடிக்கைக்கு இடைக்காலத் தடையும் விதித்தது. (எ-105)

## செம்மலை...

டுள்ளன.

தமிழரது இருப்பைக் கேள்விக்குள்ளாக்கி திணைக்களங்களின் பெயரால் அபகரிக்கப்பட்டுள்ள செம்மலை நீராவியடியில் தமிழர்கள் ஒன்று கூடி தமது பலத்தையும், ஆக்கிரமிப்பின் எதிர்ப்பையும் காட்ட இந்தப் பொங்கல் விழாவில் ஒட்டுமொத்த தமிழர்களும் கூட வேண்டும் என்று சமூக வலைத்தள நண்பர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பிடியில் சிக்கியிருக்கும் தமிழர்களது பாரம்பரிய நிலத்தில் இன்று காலை 108 பானைகளில் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

முன்னதாக கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அதிகாலை 3 மணியவில் பண்டம் எடுத்து வரப்பட்டு 108 பானையில் பொங்கல் இடம்பெறவுள்ளது. சாதி, மத, அரசியல், வர்க்க வேறுபாடுகளைக் களைந்து தமிழர் திருவிழாவாக அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஆலய அறங்காவல் குழுவினரும், சமூக வலைத்தள நண்பர்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில் பழைமையவாய்ந்த இந்து ஆலயங்களில் ஒன்றாக நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயம் காணப்படுகிறது. போருக்குப் பின்னர் ஆலய வளாகத்தில் பிக்கு ஒருவர் விகாரை ஒன்றை அமைக்க கட்டுமானங்களை ஆரம்பித்தார். அது தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகிறது. பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் கடந்த காலங்களில் தென்னிலங்கையில் இருந்து வந்த பலர் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழருடைய இருப்பை கேள்விக்குள்ளாக்கியிருந்தனர். அது தொடர்பில் தமிழ்த் தலைவர்களும் கடும் அதிப்தியை வெளியிட்டுவருகின்றனர். ஆனால் தொடர்ந்தும் அத்துமீறல்களும், அதிகார அடக்குதல்களும் இடம்பெறுகின்றன. செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்வதற்கான பேருந்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பான செய்தி பக்கம் - 14 இல். (எ-21)

## திருமலை...

தகுந்த சாட்சிகள் இல்லை என்று கூறி சந்தேக நபர்களை நிரபராதிகள் என எப்படி விடுவிக்க முடியும்? இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். கொலைக் குற்றவாளிகள் தப்பிக்கவே முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் 5 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த அரசபடையினர் அனைவரும் நிரபராதிகள் என திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வழக்கு விசாரணையை எதிர்கொண்டிருந்த 12 சிறப்பு அதிரடிப் படையினரும், ஒரு பொலிஸ் அதிகாரியும் என அரச படையைச் சேர்ந்த 13 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்கள் அன்றிரவு 7 மணியளவில் திருகோணமலை கடற்கரையில் காந்தி சிலைக்கு அருகில் விளையாடிக் கொண்டிருக்கும்போது அங்கு வந்த அரச படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மாணவர்கள் அனைவரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு பல்கலைக்கழக நுழைவு அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களாவர். இந்தச் சம்பவத்தில் மேலும் 2 மாணவர்கள் காயமடைந்தனர்.

மனோகரன் ரஜீகர், யோகராஜா ஹேமச்சந்திரா, லோகிதராஜா ரோகன், தங்கதுரை சிவானந்தா மற்றும் சண்முகர்ராஜா கஜேந்திரன் ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர். .

இந்தக் படுகொலையை அரசும், இராணுவத்தினரும், பொலிஸாரும் ஆரம்பத்தில் மறுத்திருந்தாலும், பின்னர் அவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்றும், அரச படைகள் மீது இவர்கள் கைக்குண்டு கொண்டு தாக்க முற்பட்ட வேளையில் கைக்குண்டு வெடித்து அவர்கள் உயிரிழந்தனர் என்றும் கூறினர். ஆனால் இறந்த மாணவர்களின் தலைகள் உட்பட உடல்களில் துப்பாக்கிச் சூடுகள் காணப்படுகின்றன. அவர்கள் மிகக் கிட்டிய தூரத்தில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும் சட்ட மருத்துவ பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த விடயத்தைப் ஒளிப்பட ஆதாரத்துடன் அறிக்கையிட்ட 'உதயன்' 'சுடர் ஒளி' திருகோணமலை செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜனும் சில நாள்களின் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேவேளை, படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் மற்றும் உறவுகள் ஆகியோருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவர்கள் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாட்டில் புகலிடம் கோரினர். எனினும் மாணவர்களின் படுகொலை தொடர்பில் அவர்களின் பெற்றோர் மற்றும் உறவுகள் நீதி கோரி நீண்ட சட்டப் போராட்டம் நடத்தினர். சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தை மருத்துவர் மனோகரன் ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் சாட்சியமளித்திருந்தார்.

மாணவர்களின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் 12 சிறப்பு அதிரடிப் படையினரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 2013ஆம் ஆண்டு ஜுலை 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கையின் நீதிப்பொறிமுறை குறித்து பன்னாட்டு அளவில் கவனத்தை ஈர்த்த விவகாரமாக இந்தப் படுகொலை வழக்கு விளங்கியது. பன்னாட்டு அமைப்புகள் இந்தப் படுகொலையைப் பகிரங்கமாகக் கண்டித்திருந்தன.

திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எம்.மொகமெட் ஹம்சா முன்னிலையில் கடந்த புதன்கிழமை இந்த வழக்கு கட்டளைக்காக வந்தது.

"வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 13 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் மன்று திருப்தியடையும் வகையில் சான்றாதாரங்கள் முன்வைக்கப்படவில்லை. அதனால் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 153 மற்றும் 154ஆம் பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சான்றாதாரங்களுடன் முன்வைக்கப்படவில்லை. அதனால் 13 எதிரிகளும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்படுகின்றனர்" என்று நீதிவான் எம்.எம்.மொகமெட் ஹம்சா கட்டளை வழங்கினார். படுகொலையுடன் சம்பந்தப்பட்ட அரச படையினர் 13 பேரும் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டமை நீதியை எதிர்பார்த்த மாணவர்களின் பெற்றோர் மற்றும் உறவுகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. இது தொடர்பில் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் 'உதயன்' நேற்றிரவு வினவியது.

"2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் திகதி திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் அரச படையினராலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் மாற்றுக்கருத்துக்களுக்கு இடமில்லை. 5 மாணவர்களும் துப்பாக்கியால் மிகக்கிட்டிய தூரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற சட்ட மருத்துவ பரிசோதனையின் அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 2 மாணவர்கள் நேரடிச் சாட்சிகளாக உள்ளனர். இவர்கள் இருவரும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். 6 சாட்சிகள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றில் சாட்சியமளிக்கவில்லை. படுகொலையை நிரூபிக்கும் தகுந்த சாட்சிகள் இல்லை என்று கூறி சந்தேகநபர்களை நிரபராதிகள் என எப்படி விடுவிக்க முடியும்? இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். படுகொலைக் குற்றவாளிகள் தப்பிக்கவே முடியாது. நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மிகக்காட்டமான அறிக்கையொன்றை விரைவில் நான் வெளியிடவுள்ளேன்" என்று அவர் தெரிவித்தார். (எ-22)

## ஒகஸ்டில்...

முடியும்.

இவ்வாறு போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பலாலி வானூர்தித் தளத்தை பன்னாட்டுத் தரத்துக்கு அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அடிக்கல் நட்டார். அதன்பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

தலைமை அமைச்சரும், அரச தலைவரும் வடக்கை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளனர். கடந்த 30 ஆண்டுகளாக எந்த அபிவிருத்தியும் செய்யப்படாதிருந்த வடக்கை அனைத்து விதத்திலும் அபிவிருத்தி செய்யவே நாங்கள் முயற்சிக்கின்றோம்.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவுள்ளோம். முன்னர் கொழும்புக்குச் சென்றுதான் உங்கள் படகுகளுக்கு அனுமதி பெற வேண்டும். இப்போது அதை யாழ்ப்பாணத்திலேயே பெறுவதற்கு வழி செய்துள்ளோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசுடன் வாரத்துக்கு ஒரு தடவையேனும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி வருகின்றார். அதன் வெளிப்பாடே இந்த வானூர்தித் தளத்தின் தரமுயர்வு.

இந்த வானூர்திச் சேவையின் மூலம் இந்தியாவுக்கு மிகக் குறுகிய நேரத்தில் பயணிக்கலாம். ஆரம்பத்தில் சிறியரக வானூர்திகளே இங்கு தரையிறங்கும். இந்தியாவிடம் இருந்து ஒரு தொகைத் தொடருந்துகளைக் கொள்வனவு செய்துள்ளோம். அவற்றில் ஒன்றை வடக்குக்கு வழங்கிருந்தோம். இன்னுமொரு தொடருந்தை வடக்குக்கு வழங்கவுள்ளோம். நாம் அனைவரும் இலங்கையர்களே. நான் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் பயின்றபோது கிரிக்கெட் விளையாடுவதற்காக தொடருந்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வந்துள்ளேன். எமக்குள் பேதங்கள் வேண்டாம். என்றார். (எ-21,26)

## கரும்புலிகள்...

கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகத்தில் நேற்றுக் காலை கரும்புலிகளி நாள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. பெண் கரும்புலி அங்கயற்கன்னிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, சுடர் ஏற்றப்பட்டது. பின்னர் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழர்களின் வரலாறுகளை கடைப்பிடிக்க வேண்டிய அதனை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோரிடத்திலும் உள்ளது என நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருந்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர், தமிழர்களின் உடைய வரலாறு தற்போது அழிக்கப்பட்டு வருகின்றது. இந்த வரலாற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய அதை அடுத்த கட்டத்துக்கு கடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு எல்லோரிடத்திலும் உள்ளது. அதில் இருந்து நாங்கள் தவறிச் செல்கின்றோம் அல்லது விலகிச் செல்கிறோம் என்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. இந்த உயிராயுதமான கரும்புலிகளின் வாழ்க்கை மறக்க முடியாத ஒன்றாகும். ஒவ்வொரு மாவீரர்களின் கனவுகளுக்கு பின்னும் பல்வேறுபட்ட தார்ப்பரியங்கள் உள்ளன. அந்தப் பெரும் தியாகமும் இன்று இருக்கின்ற சமூகத்துக்கு கடத்தப்படவேண்டும்.என்றார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,. முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, சு.பசுபதிப்பிள்ளை, மற்றும் கரைச்சி, பச்சிலைப்பள்ளி பூநகரி பிரதேசசபைகளின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தியுள்ளனர். (எ-21)

## வடக்கைக்...

நிலையத்தைப் பன்னாட்டுத் தரம் மிக்க வானூர்தித் தளமாக மாற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுப் பலாலியில் நடைபெற்றது. அதில் கொழும்பு அமைச்சர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

எதிர்காலத்தில் நீங்கள் பிற நாடுகளில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வர முடியும். கடந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் எமது நாட்டின் உல்லாசத்துறை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. இலங்கைக்கு வரவேண்டிய 2 ஆயிரத்து 300 சுற்றுலாப் பயணிகள் கடந்த மாதங்களில் பயணத்தைத் தவிர்த்துக் கொண்டனர். இது எமது பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. வெளிநாட்டவர் வராததால் மே மாதத்தில் மட்டும் எமக்கு 18 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது.

வடக்கிலும் நிறைய அபிவிருத்திகள் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் அவற்றை நினைத்த உடன் செய்ய இயலாது. அதற்குப் போதுமான நிதி எம்மிடம் இல்லை. எங்கள் வருமானம் 2 கோடி ரூபா என்றால், செலவு 4 அரைக் கோடி ரூபா என்ற விகிதத்திலேயே உள்ளது. அவ்வாறானால் எவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்வது?

அரச சேவையாளர், ஓய்வூதியம் பெறுவோர், சமுர்த்தி உதவி பெறுவோர் என மாதம் 190 கோடி ரூபா தேவையாகவுள்ளது. முன்னர் ஆட்சியில் இருந்த மகிந்த அரசு முறையான பொருளாதாரத் திட்டமிடல் இல்லாது நாட்டைக் கடனாளி ஆக்கியது. நாங்கள் இப்போது அந்தக் கடன்களைக் கொடுத்து முடித்துள்ளோம். இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 2 ஆயிரம் சொகுசுப் பேருந்துகளை இறக்குமதி செய்யவுள்ளோம். அவற்றில் ஒரு தொகுதி வடக்குக்கு வரும். இந்தப் பேருந்துகள் சில அங்கவீனர்கள் பயணிக்கக் கூடிய வசதிகளைக் கொண்டிருக்கும்.

அதைப் போன்று தொடருந்துச் சேவையை மேற்படுத்த 12 புதிய இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. தீயணைப்பு நிலையம் ஒன்றையும் இங்கு நிறுவ உள்ளோம். மாவை. சேனாதிராஜா, விஜயகலா மகேஸ்வரன், சித்தார்த்தன் ஆகியோர் இனி இங்கிருந்தே இந்தியா செல்லலாம். இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் செயற்படுத்துவது எங்கள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. இந்த வானூர்தி நிலையச் சேவைகள் யாவும் 6 மாதத்தில் நிறைவு பெறும். காணி சுவீகரிப்புத் தொடர்பாக மாவை சோ.சேனாதிராஜா கூறினார். நான் தலைமை அமைச்சர், அரச தலைவர் மற்றும் அந்த விடயத்துடன் தொடர்புடையவர்களுக்கு இது பற்றித் தெரிவிப்பேன் - என்றார். (எ-21.26)

# நீளம் பாய்தலில் யதுசனா தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 16 வயதுப் பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கொக்குக் தொடுவாய் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்ப டுத்தி பங்கு பற்றிய கே.யதுசனா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினர்.
நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்ற தடகளப் போட்டியில் 16 வயதுப் பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கொக்குக் தொடுவாய் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய கே. யதுசனா 4.86 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், வர்ண சான்றிதழையும், கிளிநொச்சி மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய பி. பிரியங்கா 4.75 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய கே. தர்மிகா 4.71 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினர். (23)





## பெண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டத்தில்
# கேமபிரியாவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 20 வயதுப் பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் காலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய எஸ். கேமபிரியா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற தடகளப் போட்டியில் 20 வயதுப் பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் காலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய கேம பிரியா 20:31.70 நிமிடங்களில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், இளவாலை கன்னியர்மட வித்தியாலயத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய கீர்த்திகா 20:26. 60 நிமிடங்களில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், குருநகர் சென். ஜேம்ஸ் பெண்கள் மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய பி.நிரோசா 22:39.50 நிமிடங்களில் ஓடி முடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

## ஆண்களுக்கான
# 5000 மீற்றர் ஓட்டத்தில் சஞ்சீவனுக்குத் தங்கம்

கரணவாய், ஜூலை 6
வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயது ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா ஸ்கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவனான எஸ். சஞ்சீவன் தங்கம் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
வடமாகாணப் பாடசாலைகளுக்கான தடகளப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்று வருகின்றன.
இதில் நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் ஸ்கந்தபுரம் வாணி வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சஞ்சீவன் 17.07.2 நிமிடங்களில் ஓடி தங்கப்பதக்கத்தையும், வவுனியா காமினி வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.நிசோபன் 17:21.2 நிமிடங்களில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும், மன்னார் புனித ஜோசவ்வாஸ் வித்தியால யத்தைச் சேர்ந்த ஜே. அருண்ராஜ் 17.47.4 நிமிடங்களில் ஓடி வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர். (108,23)





20 வயது பெண்களுக்கான நீளம் பாய்தலில்
# முருங்கன் ம.வி மாணவி அனுசலாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 20 வயதுப் பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் முருங்கன் மகாவித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய அனுசலா தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற தடகளப் போட்டியில் 20 வயதுப் பெண்களுக்கான நீளம் பரய்த்ல் போட்டியில் முருங்கன் மகா வித்தியாலயத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய அனுசலா 5.10 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும்,
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய மேருசா 4. 66 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், கௌரி அம்பாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித் துவப்படுத்தி பங்கு பற்றிய தேனுஷா 4.56 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

# நீளம் பாய்தலில் நிலவனுக்கு தங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 12 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய நிலவன் தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற தடகளப் போட்டியில் 12 வயதுப் ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய நிலவன் 4.55 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், கற்கடத்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய எஸ். கமில்ரன் 4.52 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், கிளிநொச்சி மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய என். அஜந்தன் 4.35 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினர். (23)

## உயரம் பாய்தலில்
# மகாஜனா மாணவி சுவர்ணா தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 14 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய எஸ்.சுவர்ணா தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார்.
நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் 14 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய சுவர்ண 1.37 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும் வர்ணச் சான்றிதழையும், கொக்குவில் இந்துக்கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய கிருசிகா 1.35 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும் நயினாதீவு சிறி கணேசா கனிஸ்ர மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய துசாளினி 1.33 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினர். (23)



ஆஷஸ் தொடர்;

# ஆஸி. அணியின் ஆலோசகராக ஸ்டீவ் வாக் நியமிக்கப்பட்டுள்ளார்

இங்கிலாந்தில் இடம்பெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் முடிந்தவுடன் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகின்றது. ஆஸ்திரேலியா அணி 2001 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆஷஸ் தொடரை வென்றது. அதன்பின் இங்கிலாந்து மண்ணில் தொடரை வென்றது கிடையாது.

அந்தத் தொடரைக் கைப்பற்றிய போது ஆஸ்திரேலியா அணித் தலைவராக ஸ்டீவ் வாக் இருந்தார். இதனால் தற்போது அவரது ஆலோசனை அணிக்கு மிகப்பெரிய அளவில் உதவியாக இருக்கும் என அந்த நாட்டு கிரிக்கெட் சபை விரும்புகிறது. இதனால் ஸ்டீவ் வாக்கை ஆலோசகராக நியமித்துள்ளது. ஸ்டீவ் வாக்கை ஆலோசகராக நியமித்ததை டெஸ்ட் அணித் தலைவர் டிம் பெய்ன் வரவேற்றுள்ளார்.



இன்றைய போட்டி




# பாகிஸ்தானுக்கு ஆறுதல் வெற்றி

பாகிஸ்தான் அணி ஆறுதல் வெற்றி பெற்றதே தவிர அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பை ஓட்ட சாரசரியில் எட்டவில்லை. அதனால் பாகிஸ்தான் அணியின் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றும் கனவு தகர்க்கப்பட்டது. நியூசிலாந்து அணி அரையிறுதி வாய்ப்பை பெற்றுள்ளது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம் பெற்ற போட்டியில் பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் பாகிஸ்தான் அணி 94 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. முதலாவது இலக்கு 23 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டாலும் அடுத்து இணைந்த வீரர்கள் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இம்மாம் உல் ஹக் சதம் அடித்து ஆட்டமிழந்தார். பாபர் அசாம் 96 ஓட்டங்களுடன் தனது சதத்தை தவற விட்டு ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்கவில்லை. இடையில் வாசிம் அதிடி காட்டினார். அவர் தனது அரைச் சதத்தை தவறவிட்டு 43 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைக் குவித்தது.

பந்து வீச்சில் முஷ்பீர் ரஹ்மான் சிறப்பாக பந்து வீசி 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணியின் ஆரம்பமே நிலைநிற்காமல் ஆட்டமிழக்க வழமையைப் போன்று சகிப் அல் ஹசன் பொறுமையுடன் ஆடி அரைச் சதம் கடந்தார். ஏனைய வீரர்கள் ஓரளவு சோபித்த போதிலும் அரைச் சதத்தைக் கூட எட்டவில்லை. அணி 44.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 94 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் ஷா அப்ரிடி அபாரமாக பந்து வீசி 6 இலக்குகளைக் கைப்பற்றினார். நடப்பு உலகக் கிண்ணத்தில் ஒரு இன்னிங்ஸில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

# கோக்லிக்கு மாற்று வீரர் இல்லை

## லாரா புகழாரம்

இந்திய அணித் தலைவர் விராட்கோக்லிக்கும் ஏனைய நாடுகளின் துடுப்பாட்ட வீரர்களுக்கும் இடையில் பெரிய இடைவெளியுள்ளது என மேற்கிந்திய அணியின் துடுப்பாட்ட ஜாம்பவான் பிரையன் லாரா பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

எனக்கு எப்போதும் பிடித்த வீரர் சச்சின். எனினும் இந்த யுகத்தில் கோக்லியே சிறந்தவர். அனைத்து வகையான போட்டிகளிலும் கோக்லிக்கும் ஏனைய அனைத்து வீரர்களுக்கும் இடையில் பெரிய இடைவெளியுள்ளது என்பது குறித்து எந்தச் சந்தேகமுமில்லை.

ரோகித்சர்மா இந்த உலககிண்ணப் போட்டிகளில் நான்கு சதங்களை பெற்றிருக்கலாம், ஆனால் மூன்று வகையான போட்டிகளிலும் சிறப்பாக விளையாடக் கூடிய ஒருவர் என்றால் அது இன்று கோக்லிதான்.

கிரிக்கெட்டில் சச்சின் ஏற்படுத்தி தாக்கம் மிகப்பெரியது. இந்திய வீரர்கள் வெளிநாட்டு மண்ணில் சிறப்பாக விளையாடமாட்டார்கள் என கருதப்பட்ட ஒரு தருணத்தில் அவர் அதனை நிரப்பினார். சச்சின் எல்லா வகையான ஆடுகளங்களிலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். இன்று இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அனைத்து ஆடுகளங்களிலும் சிறப்பாக விளையாடுகின்றனர். சச்சினை பின்பற்றுவதன் காரணமாகவே இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அனைத்து ஆடுகளங்களிலும் தற்போது சிறப்பாக விளையாடுகின்றனர்- என்றார்.



## சதங்களில் இங்கிலாந்து முதல் இடத்தில்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை 25 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. இதில் இங்கிலாந்து வீரர்கள் 7 சதங்கள் அடிக்க சதங்களில் இதுவரை இங்கிலாந்து முதலிடம் பிடித்துள்ளது.

இதில் பெயர்ஸ்ரோ 2 சதங்கள், ஜோ ரூட் 2, ஜேசன் ராய், மோர்கன், பட்லர் ஆகியோர் தலா ஒவ்வோர் சங்களை விளாசியுள்ளனர்.

இந்திய அணி 5 சதங்களும், ஆஸ்திரேலியா 4 சதங்களும், பங்களாதேஷ் 3 சதங்களும், நியூசிலாந்து மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் 2 சதங்களும், இலங்கை, பாகிஸ்தான் அணிகள் தலா ஒரு சதமும் அடித்துள்ளன.

# கொக்குவில் இந்துக் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.



கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கஜீத் 20 ஓட்டங்களையும், பிரவின்ராஜ் 19 ஓட்டங்களையும், சுவிஸ்கரன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அர்சன் 5 இலக்குகளையும், ஜெனிசன் 3 இலக்குகளையும், லக்ஸ்மன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 40 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக டிலான் 70 ஓட்டங்களையும், அபிராம் 46 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சரண்ராஜ், அபர்னன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 33.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. சுமித்கரன், சஜித் பெற்ற 10 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் ஜெனிங்சன் 4 இலக்குகளையும், அர்சன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

## வேலையாள்கள் தேவை

சன் டிஜிற்றல் பிரைவெட் லிமிடெட்

சூரியமஹால் திருமண மண்டபம் — Suriya Mahaal — சண்ஸ்பைசி உணவகம்

பருத்தித்துறையில் இயங்கிவரும் திருமண மண்டபத்திற்கும் ரெஸ்ரோரண்டுக்கும் உணவு பரிமாறுபவர் (வெயிட்டர்) இருவர் தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் 08.07.2019 திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு - 077 704 6623, 077 315 1654
email: shuriyamahal@gmail.com



## A/L பொருளியல்
### நடைமுறை விடயங்கள் & புள்ளிவிபரங்கள்

- ஆகப்பிந்திய தகவல்கள் & தரவுகள்
- MCQ & வினா விடைகளுடன்
- A/L 2019, 2020 போட்டிப் பரீட்சைகளுக்குரியது

ரூபா 300

2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்
2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும்
பெறவைத்த நூல்களின் ஆசிரியர் வேலாயுதம் கருணாகரன் 100/100

யாழ் பூபாலசிங்கம் புத்தகசாலை
விநியோகஸ்த்தர் : லங்கா புத்தகசாலை,
கொழும்பு - 12 T.P - 011-2341942



BCHS
## British college of higher studies
Feel the success
Canada student's visas

**IELTS (Academic/General)**
**IELTS Life skills (A1, B1 exams)**
**Diploma in English**
- 6 months week days weekend days
- For all age groups
- Excellent teacher's panel
- Individual attentions

15, Off Stanley Road, Sirambiyady lane, Jaffna.
Call 021222 4550 / 076 1380212



## புற்றுநோயாளர்களுக்கான உலர் உணவு வழங்கல்

வடமாகாண புற்றுநோய்-எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம் வருடா வருடமாக வழங்கும் உலர் உணவுப் பொருள்கள் சுவிஸ் வாழ். தமிழ் மக்களிடம் இருந்து நிதியைப் பெற்று உயர்திரு S. பாலச்சந்திரன் அவர்களினால் சேகரிக்கப்பட்டு இன்று 06.07.2019 காலை 9.30 மணிக்கு எமது பணிமனையில் ரூபா 533750/= பெறுமதியான பொருள்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. தயவு செய்து அழைப்புக் கடிதங்கள் கிடைத்தவர்கள் மட்டும் சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

லயன் DR.க.மு.பத்மநாதன் — தலைவர்
C.குகராஜன் — செயலாளர்
லயன் T.T.சிவதாசன். — பொருளாளர்



## Techno World
### A/L2019
### அனுமதி இலவசம்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 09/07 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 10/07 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 11/07 | I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, இலகு கணிதம், சித்திரம் |

அனுமதி இலவசம்
Part- I -8.30-10.30
part- II -11.00-2.00

தொடர்புகளுக்கு 077 017 5346 077 170 3549

பரீட்சை விடைகளும் இலவசமாக வழங்கப்படும்.(Marking Scheme)
(அனைத்து மாணவர்களும் வருகை தரவும்)
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.



## வாகனம் விற்பனைக்கு

NP PX XXXX மகேந்திரா Maxximo வாகனம் விற்பனைக் குண்டு.

077 757 4564



## வேலை ஆள்கள் தேவை

Welding வேலை, மேசன் வேலை தெரிந்த வேலை ஆள்கள் தேவை.

தொடர்புகளுக்கு:- வெள்ளை 076 305 6208



## வீடு வாடகைக்கு

யாழ்.திருநெல்வேலி சந்தியிலிருந்து 500 m தொலைவில் பலாலி வீதியில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

076 459 4800



MAJESTIC CINEPLEX




மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் 011 5 999 999
CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL


வடமாகாண தடகள போட்டி:

# நேற்றைய நிலவரத்தின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் முதலிடத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப்போட்டி யாழ்ப்பாணம் துரையாப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இரண்டாம் நாளான நேற்று வெள்ளிக்கிழமை முடிவின் அடிப்படையில், மன்னார் கல்வி வலயம் 193 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுள்ளது. யாழ் .கல்வி வலயம் 191 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வலிகாமம் கல்வி வலயம் 187 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், வடமராட்சி. கல்விவலயம் 122 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், வவுனியா தெற்கு கல்வி வலயம் 89 புள்ளிகளைப்பெற்று ஐந்தாம் இடத்தையும், கிளிநொச்சி கல்வி வலயம் 66 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தையும், மடு.கல்வி வலயம் 56 புள்ளிகளைப் பெற்று ஏழாம் இடத்தையும், தென்மாரட்சி. கல்வி வலயம் 47 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தையும், முல்லைத்தீவு கல்வி வலயம் 31 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும், துணுக்காய் கல்வி வலயம் 21 புள்ளிகளைப் பெற்று பத்தாவது இடத்தையும், தீவக கல்வி வலயம் 9 புள்ளிகளைப் பெற்று பதினோராவது இடத்தையும் பெற்றுள்ளன. (23)

# செல்சி அணியின் பயிற்சியாளராக பிராங்க் லம்பார்ட் நியமிக்கப்பட்டார்



செல்சி அணியின் தலைமை பயிற்சியாளராக அந்த அணிக்காக விளையாடி அதிக கோல் அடித்து, சாதனை படைத்த பிராங்க் லம்பார்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலீஷ் பிரிமீயர் லீக்கில் விளையாடும் முன்னணி கால்பந்து கழக அணிகளில் ஒன்று செல்சி. அந்த அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த மவுரிசியோ சார்ரி நீக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னாள் வீரரும், செல்சி அணிக்காக அதிக கோல்கள் அடித்தவருமான பிராங்க் லம்பார்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் டெர்பி கவுன்ட்டி அணியின்தலைமை பயிற்சியாளராக உள்ளார். தற்போது செல்சி அணிக்கு வருவதற்கு 4 மில்லியன் பவுண்ஸ் கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளது அணி நிர்வாகம்.

பிராங்க் லம்பார்ட் கடந்த வருடம்தான் தலைமை பயிற்சியாளர் பணியை தொடங்கினார். இவர் இங்கிலாந்து தேசிய அணிக்காக 106 போட்டிகளில் விளையாடி 29 கோல்கள் அடித்துள்ளார். மேலும் செல்சி அணிக்காக 2001 முதல் 2014 வரை சுமார் 14 வருடங்கள் விளையாடி 147 கோல்கள் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## காணி விற்பனைக்குண்டு

நெசவு நிலைய வீதி, நாக்கிணாவத்தை, அளவெட்டி தெற்கில், சுற்று மதிலுடன் கூடிய பயன்தரு மரங்கள், கிணறு, மின்சார வசதியுடன் 2½ பரப்புக் காணி அளவெட்டி மல்லாகம் பிரதான வீதிக்கு அருகில் விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம் தரகர் தேவையில்லை.

076 645 9306, 077 645 9784



## விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

### மாபெரும் விசேட செயலமர்வு
2019 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கானது.....

| காலம் | நேரம் | பாடங்கள் |
|---|---|---|
| 12,13,14 | 8.30 - 2.30 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 15,16 | 8.30 - 2.30 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | 8.30 - 2.30 | ICT, விஞ்ஞானம், கணிதம் (7), புவியியல், ஊடகக்கல்வி |

புதிய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திலும், பழைய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பழைய பாடத்திட்டத்திலும் தனித்தனியான அமர்வுகள்

- தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
- அமர்வுகள் ஒவ்வொன்றும் கடந்த நான்கு வருடமாக தேசிய நிலையிலும், மாவட்ட நிலையிலும் பல சாதனை மாணவர்களை உருவாக்கிய விஸ்டத்தின் அதே விசேட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.
- கையேடுகளைச் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளைமேற்கொள்ளவும்.
- வெற்றி பெறும் மாணவர்களின் தேர்வு விஸ்டம் தொழினுட்பக் கல்லூரியே.

முற்பதிவுகளுக்கு:- 021 221 7860 / 077 248 7774

தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.